அமிர்தவசனி

தெய்வீக மாதப் பத்திரிகை

மலர் : 16	குரோதி ஞு ஆடி மீ	வருட சந்தா
இதழ் : 4	ஜூலை—ஆகஸ்ட்டு மீ 1964	ரு. 3-00.

— Page — 157 —



குருத்துரோகியின் அங்கம் வெட்டிய அருளாடல்

சித்திர விளக்கம் 28. பக்கம் : 149.

ACC. NO. 9886.

பொருளடக்கம்

பக்கம்

1. முருகன் சரணமே மோக்ஷவீடு (திருப்புகழ்மணி)... 145
2. அங்கம் வெட்டியது (கி. வா. ஜகந்நாதன்) ... 149
3. ' சருவி யிகழ்ந்து மருண்டு வெகுண்டுறு '
திருப்புகழ் விரிவுரை (குகஸ்ரீ) ... 153
4. குமாரஸ்தவ விளக்கம் (திருப்புகழ் சதுரர்
சே, த. ராமலிங்கம் பிள்ளை, B. A., B. T.) ... 163
5. அருணகிரிநாதரின் இளமையும்—
முருகவேள் அவரை ஆட்கொண்டதும்
(தணிகைமணி வ. சு. செங்கல்வராயபிள்ளை, M.A.) 165
7. அகந்தையை அரிதல் (கி. வா. ஜ.) ... 169
8. வள்ளல் அளித்த வளம் (அன்பன்) ... 175
9. ஸ்ரீராமனின் சிறந்த பண்பு (ஆ. கி. ரங்கராஜன்) 180
10. இவரும் ஒரு கருவூரார் (ரஸபதி) ... 184
11. Life-Clock (*Thiruppugal Mani*) 190

Grams: MURSOKS. Phone: 51388

" பரிபாலனம் செய்து அருள்வோனே !
இருதாளின் அன்பு தருவாயே !

வெண்மையான சலவைக்கு
ஒயிட் ஹார்ஸ் சோப்

தயாரிப்பாளர் : D. பங்காரு செட்டியார்,
நேஷனல் இன்டஸ்ரீஸ்,
220, T. H. ரோட், தண்டையார்பேட்டை, சென்னை-21

Roll-78
1139
159

அமிர்தவசனி

தெய்வீக மாதப் பத்திரிகை

எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே.

ஆசிரியர் : சு. முத்துஸ்வாமி

மலர் 16	குரோதி ௵ ஆடி ௴ ஜூலை—ஆகஸ்ட்டு 1964	இதழ் 4

முருகன் சரணமே மோக்ஷவீடு

(திருப்புகழ்மணி)

ஆண்டவன் அடியார்களுக்குச் சேவகனாயிருக்கிறான். அடியார்களிடத்தில் அவனுக்கிருக்கும் ப்ரேமை அளவற்றது. அடியார்களை எந்த வகையில் மகிழ்விக்கலாம். அவர்களுக்கு என்ன உதவி செய்யலாம் என்று அவர்களைச் சுற்றிக் கொண்டேயிருக்கிறானாம். இதைப் "பணியாவென வள்ளி பதம் பணியும் தணியா அதிமோக தயாபரன்" என்ற அடியால் குறிப்பிடுகிறார் அருணகிரியார்.

முருகனுடைய பெருமையைச் சொல்லும்பொழுது "முடிமேலே அஞ்சலி செய்வோர்கள் நேயக்காரா! செஞ்சொல் அடியார்கள் வாரக்காரா" என்று குறிப்பிட்டுள்ளார்.

கருமேகம் சூழ்சடையில், கங்கைவைத்தாய்! என்கன்ம
இருள்தாப தீர்த்தருளாய்! என்றிறைஞ்சு கின்றேனே!

சொற்களில் சிறந்தது ஆண்டவனுடைய நாமம். அந்நாமத்தை விடாமல் சொல்லிக் கொண்டிருப்பவர் களுக்கு வேண்டியவற்றையெல்லாம் கொடுக்கத் தயா ராய்க் காத்திருக்கிறான். தன் நாமத்தைச் சொல் பவர்களைத் துன்பங்கள் அணுகாமல் அவர்கள் அரு கிருந்து அல்லும் பகலும் காப்பதால் அவனைத் "தொழுது வழிபடும் அடியார் காவற்காரப் பெருமாள்" என்றார்.

பக்தி வழிகளில் சுலபமானது நாம சங்கீர்த்தனந் தான். நாமத்தை மனமுருகிச் சொல்லும் பொழுதே, நாமத்திற்குரிய நாதன் உள்ளே புகுந்து, அவனுடைய உடல் பொருளாவியெல்லாம் தனதாக்கிக் கொண்டு விடுகிறான். பகவான், வேலையைச் செய்து முடித்த பிறகு கூலி கொடுக்கும் வர்க்கத்தைச் சேர்ந்த வனல்ல; நாமத்தைச் சற்று நேரம் சொன்னாலும், அப்பொழுதே கூலி கிடைத்து விடுகிறது.

"ஒருகால் முருகா வெனவோ தடியார்
முடிமே லிணை தா ளருள்வோனே"

என்றார் அருணகிரியார்.

பக்தர்களை நாடி அவர்களைத் தொடர்ந்து கொண் டிருக்கிறான் முருகன். தன்னை நினைக்காத அசுரத் தன்மை வாய்ந்தவர்களுக்கு யமனாயிருக்கிறானும்.

பக்தர்களுக்கு முருகனாய்த் தோன்றும் தெய் வமே, அசுரர்களுக்கு யமனாய்த் தோன்றுகிறது.

மனமறிய எத்தவறும் செய்திலேன்; என்றாலும்,
இனமறிய முற்பிறப்பில் ஏதேது செய்தேனோ?

யமனுயிருந்து அசுரத் தன்மையை யழித்துத் தூய்மை யான உயிரைத் தன்னுடன் சேர்த்து ஆட்கொள் வதே ஆண்டவனுடைய கருணையின் இயல்பு. சூரபது மனுக்கு யமனுயிருந்து அவனுடைய அசுரத் தன்மை களை யழித்தான். அவனைத் தனது வாகனமாகவும் கொடியாகவும் கொண்டு ஆட்கொண்டான்.

உண்மையான பக்தர்களுக்குத் தன்னுடைய பேரழகுமிக்க கருணைவடிவத்தைக் காட்டி யாட்கொள் கிறான். அந்த வடிவத்தை "எழுதரிய அறுமுகமும்—மணிநுதலும்—வயிரமிடை யிட்டுச் சமைந்த செஞ்சுட்டிக் கலன்களும்—துங்கநீள் பனிருகருணை விழிமலரும்-இலகுபன்னிரு குழையும் ரத்னக் குதம்பையும் பத்மக் கரங்களும்—செம்பொனூலும்—மொழிபுகழு முடை மணியு மரைவடமு மடியிணையும் முத்தச் சதங்கையும்-சித்ரச் சிகண்டியும் செங்கைவேலும், முழுதுமழகிய குமரா"—என்று பாராட்டுகிறார்.

முருகன் கையிலுள்ள வேல் ஆராயும் நீதி வேலாம். ஜீவராசிகளின் வினைகளை அப்புறப் படுத்தி, உண்மையான பக்தியைஅறிந்து ஏற்றுக் கொள்வதற் காகவே வேல் வைத்துக் கொண்டிருக்கிறானும்.

நீ வேறு, நான் வேறு என்ற வேற்றுமையின் உருவமாகிய யமன் வந்து தாக்கும் பொழுது,

கமல முகங்களும் கோமளத் திலங்கு
நகையும் நெடுங்கணும் காதினில் துலங்கு
கனக குதம்பையுந் தோடும் வஜ்ர அங்கதமும்—
[அடற்சுடர்வேலும்,

மாதேவா! தெய்வ மருந்தாகி, என் முன் இப்
போதே வா! என்றெனது புந்திநைதல் ஓராயோ ?

கடிதுல கெங்கணும் தாடியிட்டு வந்த
மயிலு மிலங்கலங் காரபொற் சதங்கை
கழலொலி தண்டையங் காலு மொக்கவந்து—
[வரமெனக் கருள்கூர்வாய்."
என்று முருகனை வேண்டுகிறார்.

இத்தகைய மங்கள ரூபத்துடன் பக்தர்களுள் புகுந்து விடுகிறான் முருகன். பக்தர்கள் யமனிடம் போவதில்லை. முருகன் தான் வந்தழைத்துப் போகிறான்.

முருகா! பவவினையிலே ஜனித்த தமியனாகிய யான், மயக்கத்திலே பிறந்து, மயக்கத்திலே வளர்ந்து, மயக்கத்திலே அணுவாய்க் கிடப்பது முறையா? உன் சரணமாகிய கமலத்தைத் தவமுறைப்படி அரைநிமிஷம் நினைத்தாலும் போதுமே. நீ வந்து ஆட்கொள்வாயே! அப்படி நினைக்க விடாமல் வினைகளென்னைத் தடுக்கின்றனவே. நீ அவ்வினைகளை யழித்து உன்னுடன் கலந்துவாழும் பெரு வாழ்வைத் தரமாட்டாயா என்று முறையிடுகிறார். சரண கமலாலயம் ஜீவராசிகளைத் தன்னிடத்தில் அடக்கி லயப்படுத்தும் தன்மை வாய்ந்தது. எங்கும் பரந்து இன்பத்தைத் தன்னுள் அடக்கி வைத்திருக்கும் மோக்ஷமே முருகனுடைய சரணம். ஆசாபாச காம க்ரோதங்களிலிருந்து விடுபட்டிருப்பதே வீடு. அந்த வீடு முருகனுடைய சரணத்தில் தானிருக்கிறது.

வானாளும் நல்லருளால், அன்பர்களை வாழ்விப்பாய்;
ஆனாலும், சாந்தம் அமையாநான் பாத்திரனோ?

அங்கம் வெட்டியது

(கி. வா. ஜகந்நாதன்)

குலோத்துங்க வழுதி அரசு புரியும் காலம் அது. அப்போது வடநாட்டிலிருந்து முதியவன் ஒருவன் மதுரை மாநகரை அடைந்தான. அவன் வாள்வித்தை பயிற்றுவதில் வல்லவன். இறைவனிடத்தில் பக்தி உள்ளவன். அவனிடம் பல இளைஞர்கள் வாள் வித்தை கற்றுக்கொள்ள வந்தார்கள். தான் கற்றது வீண்போகாமல் இருக்க அவன் அவர்களுக்கு அவ்வித்தையைக் கற்பிக்கலானுன்.

அவனிடம் கலைகற்க வந்தவர்களில் சித்தன் என்பவன் ஒருவன். அவன் எந்தத் தீய செயலைச் செய்யவும் அஞ்சாத இயல்புள்ளவன். அவன் வாள் வித்தையை அந்த முதியவனிடம் நன்ருகக் கற்று அதில் மிகவும் வல்லவனுனுன். அதனுல் அவனுக்குச் செருக்கு உண்டாயிற்று. தானே மற்றவர்களுக்கு வாள்வீச்சுக் கலையைப் பயிற்றலாம் என்ற துணிவு ஏற்பட்டது.

அதனுல் அவன் தனியே ஒரு பயிற்சிக்கூடத்தை அமைத்துக்கொண்டான். பல இளைஞரைக் கூட்டி வித்தை கற்பித்தான். வடநாட்டுக் கிழவன் கூடமும் தன் கூடமும் இருந்தால் கிடைக்கும் ஊதியம் இருவருக்கும் செல்கிறதை யறிந்து அவனுக்குப் பொருமை உண்டாயிற்று. தன் ஆசிரியனை ஊரைவிட்டுப் போகும்படி செய்துவிட்டால் எல்லா ஊதியமும் தனக்கே வரும் என்ற ஆசை அவனுக்குத் தோனறியது. அதன்மேல் இளைஞர்களிடம் தந்திரமாகப் பேசி அவர்களுடைய மனத்தை மாற்றித் தன்னிடமே வந்து பயிலும்படி செய்

நெஞ்சால் நினைந்து நெகிழ்கின்ற என்றனை, உன்
செஞ்சரணச் சேவடியிற் சேர்ப்பதுவும் என்றேயோ ?

தான். இதோடு நில்லாமல் மற்றொரு பாவகாரியமும் செய்ய முயன்றான்.

ஆசிரியன் வீட்டில் இல்லாத நேரத்தில் அங்கே சென்று அவன் மனைவியை அணுகித் தகாத வார்த்தைகளைக் கூறினான். அவற்றைக் கேட்ட அந்த மங்கை ஒன்றும் எதிர்பேசாமல் இருந்தாள். ஒருநாள் அந்தப் பெண்மணியின் கையைப் பற்றினான். அவள் கையை உதறிக் கொண்டு அவனை வெளியிலே தள்ளிவிட்டுத் தாழ்ப்பாள் போட்டுக் கொண்டாள்.

அவள் இந்தச் செய்தியைத் தன் கணவனிடம் சொல்லவில்லை. மதுரை நாயகனாகிய சொக்கலிங்கக் கடவுளை எண்ணி, "இந்த இடரினின்றும் எனைக் காப்பாற்ற வேண்டும்" என்று வேண்டிக் கொண்டு நைந்தாள்.

நான்மாடக் கூடலில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் அந்தப் பெண்மணியின் முறையீட்டை உணர்ந்து அவளுக்குத் தீங்கிழைக்க எண்ணிய பாவிக்குத் தண்டனை அளிக்கத் திருவுள்ளம் கொண்டான். வடநாட்டுக் கிழவனைபோலக் கோலம் பூண்டு சித்தனை அடைந்து, "சித்தா, நீ கட்டிளங் காளை. நான் முதியவன். நாம் இருவரும் வாட்போர் செய்து நம்முடைய பலாபலத்தை அறிவோம். நாளைக் காலை இநத நகரின் புறத்தே நாம் சந்திப்போம்" என்றான்.

அதுகேட்ட சித்தனுக்கு மிக்க உவகை உண்டாயிற்று. தன் மனப்படியே யாவும் நடைபெறும் காலம் வந்துவிட்டதென்று மனப்பால் குடித்தான்.

மறுநாள் சித்தன் போருக்கு ஏற்ற உடையை அணிந்து கொண்டு குறிப்பிட்ட இடத்தை அணுகினான். ஆலவாய் இறைவனும் வாட்கலை கற்பிக்கும் குருவைப் போலக் கோலம்

பொன்செய்த மேனிப் புண்ணியா! நீயிரங்க
என்செய்ய வேண்டும்யான்? ஓர்சொல்சொல் எம்மானே!

பூண்டு கச்சிறுக்கி வாள் அணிந்து நெற்றி நிறையத் திருநீறு பூசிக்கொண்டு அந்தக் கயவனுக்கு எதிரே வந்து நின்றான்.

இருவரிடையும் வாட்போர் தொடங்கியது. போர் மிகவும் கடுமையாயிற்று. இதனைப் பார்க்க மக்கள் கூடிவிட்டார்கள். சிங்கமும் நரியும் எதிர்த்துப் போர்செய்ததுபோல இருந்தது அந்தக் காட்சி.

அப்போது இறைவன் எல்லோரும் கேட்கும்படி சித்தனை ஒறுக்கலானான். "உன் குருவின மனைவியைத் தீங்குபுரிய நினைத்தாயே அந்த நெஞ்சை இதோ குத்துகிறேன்" என்று வாளாற் குத்தினான். "அந்தப் பெருமாட்டியிடம் தகாத வார்த்தை பேசின நாவை இதோ அறுக்கிறேன். உன்னால் முடியுமானால் காத்துக்கொள்" என்று கூறி அதை அறுத்தான். "இந்தக் கைதானே அந்தக் கற்புக்கரசியைத் தொட்டது?" என்று அந்தக் கையை வெட்டினான். இப்படியே ஒவ்வோர் அங்கமாக வெட்டிக் கடைசியில் அவன் தலையையும் வெட்டி வீழ்த்தி மறைந்து போனான்.

அந்தக் களத்தில் நின்று இந்தப் போரைக் கண்டிருந்தவர்கள், வாட்கலை யாசிரியனைத் திடீரென்று காணாமல் அவனைத் தேடிக்கொண்டு சென்று அவன் வீட்டை அடைந்தனர். அவனுடைய மனைவியைக் கேட்டபோது, "இறைவன் திருக்கோவிலுக்குச் சென்றிருக்கிறார்" என்றாள். அப்படிச் சொல்லிக்கொண் டிருநதபோதே கோயிலுக்குப் போனவன் திரும்பி வந்தான். வந்தவர்கள் "சிததனோடு போரிட்டு வென்றாயே! மறுபடி உன்னைக் கண்டு பாராட்டலாம் என்று பார்த்தோம். உன்னைக் காணவில்லை. எங்கேயும் தேடிக் காணாமல் இங்கே வந்தோம்" என்றார்கள்.

உள்ளத்தை எப்போதோ நினனிடத்தில் ஒப்படைத்தேன்,
கள்ளமனம், மீண்டென்னைக் கண்டுநகைக் கின்றதுவே!

அதைக்கேட்ட வாளாசிரியன் ஒன்றும் தெரியாமல் திகைத்தான். "நான் போர்செய்யவும் இல்லை; நீங்கள் சொன்னபடி சித்தனுடைய அங்கத்தை வெட்டவும் இல்லையே! என்னைப் போல வந்து இதனைச் செய்தவர் யாரென்று தெரியவில்லையே! மதுரைப் பெருமான் செய்த அருட்செயலோ இது?" என்று சொல்லி வியந்தான். அப்போது அவனுடைய மனைவி சித்தன் செய்த தீங்குகளைச் சொன்னாள். அந்தப் போரைக் கண்டவர்கள் இறைவன் ஒவ்வொன்று சொல்லிச் சித்தனுடைய அங்கங்களை வெட்டியதைச் சொன்னார்கள். அவற்றை யெல்லாம் கேட்ட அந்த ஆசிரியன், "இது என்னை ஆளுடை இறைவன் திருவிளையாடல்தான்; ஐயமே இல்லை" என்று கூறி உருகினான். உடனே திருக்கோயில் சென்று சொக்கலிங்கப் பெருமான் திருவடியில் வீழ்ந்து பணிந்தான்.

இந்தச் செய்தி பாண்டியனுக்குத் தெரிந்தது. வேற்று நாட்டிலிருந்து வந்து மதுரையில் வாழும் ஒருவனுடைய மானத்தைக் காக்க ஆண்டவன் இந்தத் திருவிளையாடல் செய்ததை எண்ணி மனம் உருகிக் கோயிலுக்கு வந்து பணிந்தான். "அடியவருக்கு எளியவராகிய இப்பெருமான் பரதேசி காவலர்" என்றுகூறி வாழ்த்தினான்.

அப் பாண்டியனுக்குப் பின் அனந்தகுண பாண்டியன் பட்டம் பெற்றான்.

எண்ணிலா அன்பர்களை, ஏன்றுகொளும் நின்னுடைய
தண்ணருள், என்னைத் தழுவுநாள் என்றேயோ?

சீகாழி

திருப்புகழ் விரிவுரை

(குகஸ்ரீ.)

அருவி யிகழ்ந்து மருண்டு வெகுண்டுறு
சமய மொன்றிலை யென்ற வரும்பறி
தலைபரு நின்று கலங்க விரும்பிய தமிழ்கூறுஞ்
சலிகையு நன்றியும் வென்றியு மங்கள
பெருமைக ளுங்கன முங்குண மும்பயில்
சரவண மும்பொறை யும்புக ழுந்திகழ் தனிவேலும்
விருது துலங்க சிகண்டியி லண்டரு
முருகி வணங்க வரும்பத மும்பல
விதரண முந்திற முந்தர முந்தினை புனமானின்
ம்ருகமத குங்கும கொங்கையில் நொந்தடி
வருடிம ணந்துபு ணர்ந்தது வும்பல
விஜயமு மன்பின்மொ ழிந்துமொ ழிந்தியல் மறவேனே;

கருதியி லங்கை யழிந்துவி ழும்படி
அவுணர டங்கம டிந்துவி ழும்படி
கதிரவ னிந்து விளங்கி வரும்படி விடுமாயன்
கடகரி யஞ்சி நடுங்கி வருந்திடு
மடுவினில் வந்துத வும்புய லிந்திரை
கணவன ரங்க முகுந்தன் வருஞ்சக டறமோதி
மருது குலுங்கி நலங்க முனிந்திடு
வரதன லங்கல் புனைந்தரு ளுங்குறள்
வடிவனெ டுங்கடல் மங்கவொ ரம்புகை தொடுமீளி
மருக புரந்தர னுந்தவ மொன்றிய
பிரமபு ரந்தனி லுங்குக னென்பவர்
மனதினி லும்பரி வொன்றிய மர்ந்தருள் பெருமானே !.

தீங்குபல செய்யும் திருட்டறிவு செம்மையுற,
ஈங்கிவ் உடலில், இன்னுமிரு ஏன்பாயோ ?

(பதவுரை) (கருதி.........மாயன் மருக !)

கருதி, இலங்கை அழிந்து விழும்படி - (சீர்கெட்ட இராவணன் தீமையைச்) சிந்தித்து, (பொல்லா) இலங்கை அழிந்து போம்படி ;

அவுணர் அடங்க மடிந்து விழும்படி - (ஏதம் செய்) அரக்கர் முழுதும் இறந்து போம்படி ;

கதிரவன இந்து விளங்கி வரும்படி விடு மாயன் - சூரிய சந்திரர்கள் (வளநதர) விளக்கமுற்று வரும்படிச் செய்த அதி ஆச்சர்யமான செயல்களை யுடையவரும் ;

கடகரி அஞ்சி நடுங்கி வருநதிடு மடுவினில் வந்து உதவும் புயல் - (கம்பீர) மதயானையான கஜேந்திரர் (உடல்) நடுங்கி (உளம்) வருந்திய மடுவின் இடத்தில், (அவரை) முன்வந்து காதத முகில் வண்ணரும் ;

இநதிரை கணவன் - மலர்மகள் மணாளரும் ;

அரஙக முகுந்தன் - திருவரங்கததில திருக்கண் வளரும் முகுந்தரும் ;

வரும் சகடு அற மோதி - (மோத) வந்த சகடாசுரனை மொததியவரும் ;

மருது குலுஙகி நலங்க முனிநதிடு வரதன் - (முன்னின்ற) மருதமரம் குலுஙகி, வருந்த முனிந்த வரத மன்னரும் ;

அலங்கல் புனைந்தருளும் குறள் வடிவன் - (தாமரை) மாலை தரித்த (பிரமசாரி எனக்) குட்டை வடிவம் கொண்டவரும் ;

நெடுங்கடல் மங்க ஓர் அம்பு கைதொடு மீளி மருக - கரிய பெரிய கடல் வற்றுமாறு அம்பு ஒனறைக் கரத்தால் எடுத்துத் தொடுத்த மிடுக்குடையவருமான திருமாலின் மருகனே ! [மீளி - புருடோத்தமன்.]

உன்னடியார் கூட்டத்து, உற்றிருப்பாய் என்கின்றார்;
அன்னவருள் என்னைச் சேர்த்(து) ஆளாக்கல் ஆகாதோ ?

புரந்தரனும் தவம் ஒன்றிய பிரம புரந்தனிலும்-(உலகைக் காக்கும்) இந்திரனும் (புனித) தவத்தைப் பொருந்திச் செய்த (பரம) சீகாழிப் பதியிலும் ;

குகன் என்பவர் மனதிலும் - குகா என்று (இடையறாது) கூறுபவர்தம் உள்ளத்திலும் ;

பரிவு ஒன்றி அமர்ந்தருள் பெருமாளே-அன்பு பொருந்தி அமர்ந்தருளும் பெருமிதமான பெரியோனே !

(சருவி..........மொழிந்து இயல் மறவேனே.)

சருவி, இகழ்ந்து, மருண்டு, வெகுண்டு - சச்சரவில் இறங்கி, இகழ்ந்து பேசி, அறிவு குலைந்து, கோபம் கொண்டு ;

உறு சமயம் - பொழுது போக்கும் (பொல்லாத) சமய வாதிகளும் ;

ஒன்று இலை என்றவரும் - (கடவுள் என்று) ஒருபொருள் (என்றும் இருந்தது) இல்லை என்று, (நாவார) வாதிடும் நாஸ்திகரும் ;

பறி தலையரும் நின்று கலங்க - தலைமயிர் பறிக்கும் சமணர்களும் (கண்டு) நின்று கலக்கம் அடைய ;

(1) தமிழ் கூறும் சலிகையும் - (ஆளுடைய பிள்ளையாராக அவதரித்துத்) தமிழ்மறை பாடும் (உமது) அதிகாரத்தையும் ;

(2) நன்றியும் - (ஒருமை நினைவினர்க்கு) செய்யும் பேருதவியையும் ;

(3) வென்றியும் - (விளைவித்த செயல்களில் கொண்ட) வெற்றிகளையும் ;

(4) மங்களப் பெருமைகளும் - (பெருகிய) மங்களப் பெருமைகளையும் ;

(5) கனமும் - மகத்தான மதிப்பையும் ;

(6) குணமும் - (குலவும்) ஆறு குணங்களையும் ;

நல்லோர்கள் பல்லோர் நலமுற்ற முன்றிலில்,
வல்லாளா! என்னை நீ வைத்திருந்தால் ஆகாதோ ?

(7) பயில் சரவணமும் - (ஆறு சேயாய்) விளையாடிய (புனித) சரவணப பொய்கையையும் ;

(8) பொறையும் - (போற்றத் தக்க) பொறுமையையும்;

(9) புகழும் - (புறத்தவரும் பாராட்டுகின்ற) புகழையும் ;

(10) திகழ் தனிவேலும் - (கரத்தில்) விளஙகும் ஒபபற்ற வேலாயுதத்தையும் ;

(11) விருது துலங்க, அண்டரும் உருகி வணங்க, சிகண்டியில் வரும் பதமும் - வெற்றிச் சின்னங்கள் (பல) விளஙக, வானவரும் மனமுருகி வணங்க, (தெய்வ) மயில்மேல் வரும் திருவடிகளேயும் ;

(12) பல விதரணமும் - (இன்ப) விவேகம் விளங்கும் பல ஈகைகளேயும் ;

(13) திறமும் - (தெளிவு வெளிப்படும்) திறமைகளேயும்;

(14) தரமும் - (மெய்ம்மையான) மேன்மைகளேயும் ;

(15) தினை புனமானின் ம்ருகமத குஙகும கொஙகையில் நொந்து அடிவருடி மணந்து புணர்ந்ததுவும் - தினைபபுனதது மான மகளான வள்ளியாருடைய கஸ்தூரி, செஞ்சாந்துக் குழம்புகள் பூசிய (கன) தனஙகளில் (மயஙகி) வருநதி, (வாழ் விக்கும் அத்தேவியின்) திருவடிகளே வருடி, மணநது இணைந்த மகிமைகளேயும் ;

(16) பல விஜயமும் - (மற்றுமுள) பல திருவிளையாடல் களேயும் ;

அனபின் மொழிந்து மொழிந்து, இயல் மறவேனே - அன் புடன் ஓதி ஓதி, (உமது சொரூப தடத்தமான பதினுறு) இயல்புகளே, (என்றுமே) மறவேன (எளியேன்), (எ-று.)

இராவணன் மூன்று உலகங்களின் முதலாளி. அவன் தலைநகா இலஙகை. அவன் ஆட்சியில், பாழும் தீவினை நகர்

புலவர்கள கூட டுறவு பூணடிருகக, எனபாவம்,
நல்லதலா இவ்வுடலில், நாணியிரு என்றதுவோ?

முழுதும் பரவி இருந்தது. இருளை மிதிக்கும் இருள்போல், நகரில் அரக்கர்கள் நடமாடினர். கழல் ஒலிக்கும் காலர். கடும் சூலம் ஏந்திய கையர். கனல் கொப்புளிக்கும் கண்ணர். இவர்களுள் கல்லா மறவர் சிலர். கற்ற மறவர் பலர்.

இரக்கம் அற்ற அரக்கப் புலமை, பொன்னுட்டுத் தெய்வப் புலவர்களை ஓட ஓட விரட்டியது. பகலெல்லாம் இவர்களது பயங்கர ஆட்சி. இரவு பிறநததும் மதுவெறி, இச்சை வெறி, அயர்ந்த நித்திரை. இதற்கு அயலாய், அரக்கர்கள் நேர்மையை அறிந்திலர்.

இந்த அதர்மத்தால், சூரிய வேகம் சுருங்கியது. மதி மண்டல அமுதம் வறண்டது. இதை யறிந்த திருமால், இராமனுக வந்தார்.

வானரங்களுடன், இலங்கைக்குச் செல்ல வழிவிடு என்று, வருணனை எண்ணிப் பயனுன தர்ப்ப சயனத்தில் படுத்தார். அவர் அருமை யறியாத அவன், அவர் கைகளின்மேல் அலைகளை மோதவிட்டு அகங்கரித்தான். அதை யறிந்த ரகுபதி, அக்கினியஸ்திரத்தால் அவன் கொட்டத்தை அடக்கினுர். வெருண்டு வருணன் வெளிப்பட்டு, கடல்மேல் அணை கட்டிச் செல்க என்று கைகுவித்தான்.

" பரந்திட்டு நின்ற படுகடல் தன்னை
இரந்திட்ட கைம்மேல் எறிதிரை மோத,
கரந்திட்டு நின்ற கடலைக் கலக்க
சரந்தொட்ட கைகள் "

என்று, ஆழ்வாரும் இவ்வரலாற்றை அனுபவித்துப் பாடுகிருர்.

' நெடுங்கடல் மங்க, ஓர் அம்பு கைதொடு மீளி ' என்று அடியோங்களும், இச் செய்தியை அறிந்துளம்.

உள்ளொன்றி நின்ருர் உயர்கின்ருர்; என்பாவக்
கள்ளமனம், கீழ்நோக்கா வண்ணம்நீ காவாயே!

அதன்பின் 'இலங்கை அழிந்து விடும்படி, அவுணர் மடிந்து விழும்படி, கதிரவன் இந்து விளங்கி வரும்படி' செய்த இராமபிரானது அற்புத ஆற்றல்கள் பலவும் எண்ணி, அவரை, 'மாயன்' என்று மகிழ்கின்றோம்.

கடல் வண்ணரை, நாள்தோறும் வழிபட்டார் கஜேந்திரர். ஒரு நாள் பூசைக்குப் பூப்பறிக்கப் பொய்கையில் இறங்கினார். அவ்வமயம், பயங்கர முதலையொன்று அவர் காலைப் பற்றியது. விடுதலை கருதி, மூண்டு விறுவிறுத்து முயன்றார். முடியவில்லை. இறுதிநாள் அணுகியது என்று எண்ணினார். முதல்வன் பூசை முடியுமுன, இறந்து போக நேர்ந்ததை எண்ணி இரங்கினார். ஆதிமூலமே என்று அலறினார். சக்கரம் விரைந்தது. முதலையைச் சங்கரித்தது. தாபம் தீரு மாறு, நீலமேகம்போல் திருமால் எதிர்நின்றார். அவரது திருவடிகளைக் கண்ணீரால் அலம்பி, குளிர்ந்து இருந்த மலர்களைக் கோவிந்தா என்று கொட்டினார். அப்போதே அவரது உடம்பிற்கும் விடுதலை; உயிர்க்கும் முத்திப்பேறு உதவிய பெருமானை,

' கடகரி அஞ்சி நடுங்கி வருந்திடு
மடுவினில் வந்துதவும் புயல் '

என்று கைகுவிப்பம் யாம். சம்சார மடுவில், ஐம்புல முதலைகள் வாயில் அகப்பட்டு, மதர்த்திருந்த நிலைமாறி, மரணத்தை நினைந்து நடுங்கும் நாங்கள், அற்புத இவ் வரலாற்றையெண்ணி அமைதி பெறுவம்.

நாரணற்கு உபஇந்திரர் என்று ஒரு பெயருண்டு. அவர் தேவியும் இந்திரை என்று பெயர் பெறுவர். மேலும், செல்வ வாழ்வை இந்திர போகம் என்று இயம்புவர். அச் செல்வ

வெள்ளைமனம் கொள்ளைபோய், வெவ்வினையில் வீழுமுனம்,
கள்ளமனம் திருந்தச் சதுர்காட்டி ஆளாயே.

மணாளரை; 'இந்திரை கணவன்' என்று எண்ணுவதிலும் இன்பம் உளது.

காவிரி என்று ஒரு நதி. கொள்ளிடம் என்று ஒரு ஆறு. அந்த இரண்டன் நடு இடம் அரங்கம் எனப்பெறும். அங்கு திருமால அறிதுயில் கொண்டுளர். புறவாழ்வில் போகாதிபர்; அவர் அகவாழ்வில் யோகாதிபர். இதை 'அரங்க முகுந்தன்' என்ற பெயராலேயே அறிந்து மகிழ்கிறோம்.

திரேதாயுக அரக்கர் ஆவிகள், துவாபர யுகத்திலும் அசுர உடலெடுத்து ஆரவாரித்தன. அவர்களால், இமையவர் முனிவர்கள் இடர்பல எய்தினர். அதை அறிந்த திருமால், கண்ணனாக அவதரித்தார்.

ஒரு வண்டி. அதன் கீழ் ஒரு தொட்டில். அதனில், காலும் கையும் அசைத்து, குழந்தைக் கண்ணன் குதூகலித்து இருந்தான். தெய்வத் திருமேனி இது என்று, அசுர உலகம் அறிந்தது.

ஒரு அசுரன். உடனே அவ்வண்டியில் ஆவேசித்தான். மூன் சாய்ந்து கொல்ல முயன்றான். கயவன் கருத்தறிந்த கண்ணன், எட்டி உதைத்தான். அது தாங்கல் ஆற்றாத அசுரன் சகடன், அப்போதே இறந்தான்.

'சகடு அற மோதி,' அசுர உலகை இப்படியே அழித்த வரலாறுகட்கு அளவில்லை.

இளம் பருவக் கண்ணன் சேட்டைகள், ஏராளம் ஆயின. அது பொறாத அன்னை யசோதை, கண்ணனைக் கயிற்றால் கட்டினள். கயிற்றின் மறுமுனையை உரலிற் பிணித்தாள்.

அன்னை யில்லாச் சமயம் அறிந்து, சிரித்துக் கொண்டே கண்ணன் தவழ்ந்து சென்றான். உரலும் தொடர்ந்து உருண்டது. எதிரில் இரு மருத மரங்கள் இருந்தன. இரண்டன்

அச்சப் படுத்திவினை, ஆகாத நோய்ப்படுத்திச்,
சச்சரவு செய்முன்,நின் தாளடையச் செய்யாயே!

நடுவில் கண்ணன் சென்றான். இருந்த உரல் குறுக்காகி இழுபட்டமையால், வேரற்று மாமிரண்டும் விழுந்தன. அதே நேரத்தில், இருவர் எதிர்நின்று இறைஞ்சினர்.

பிரபு! நாங்கள் புனித குபேரரது புதல்வர்கள். மாறுபாடு பல செய்த எங்களை, நாரதர் மருத மரங்களாக என்று சாபம் இட்டார். பலநாள் வருந்தி யிருந்தேம். நகைஒளி, நோக்கொளி, ஸ்பரிச ஒளி மூன்றாலும், தீராச் சாபம் தீர்த்தனை! வாழி பெரும! என்று அவ்விருவரும் வழுத்திச் சென்றனர்.

'மருது குலுங்கி நலங்க முனிந்திடு வரதன்' என்று, இவ் வரலாற்றைப் போற்றி உலகம் புளகிக்கின்றது.

குட்டை வடிவப் பிரமசாரியாய், அச்யுதர் அசுர மாபலியை அணுகினார். அவனிடம் மூன்றடி மண் தானம் வாங்கி, இரண்டடியால் மேலும் கீழும் அளந்தார். மூன்றாவதாக எடுத்த அடியை, அவன் தலையில் வைத்து அழுத்தி, அசுர கொட்டம் அடக்கினார்.

"சிறியன் என்று இளஞ்சிங்கத்தை இகழேல் கண்டாய்!
சிறுமையின் வார்த்தையை மாவலியிடம் சென்றுகேள்!"

என்று, இது குறித்துப் பேசுகிறார் நம் பெரியாழ்வார். இப்படி வெற்றி மாலை சூடிய அவரை, 'அலங்கல் புனைந்தருளும் குறள் வடிவன்' என்று, நாங்கள் அனுபவிக்கிறோம்.

திருமால் செய்த ஒவ்வொரு செயலையும், நீரும் செய்தீர். அவைகளைக் கந்தபுராணமும், தலபுராணங்களும் அறிவிக்கின்றன.

பிரமன் வழிபட்ட பதி, பிரமபுரம் எனப்பெறும்; சீகாழி முதலிய பன்னிரண்டு நாமம் கொண்ட அப்பதியில், இந்திரனும் வந்து தவம் செய்தான்.

தீர்த்தம் நிறைசடையாய்! தீம்பு நிறையுலகில
சேர்த்தசெயல் போதும்;எனைச் செஞ்சரணிற் சேர்த்தருளே!

எந்த யுகத்திலும் இருந்த அசுர ஆவிகள், இந்தக் கலி யுகத்தில் அகவுறவு அற்ற புலவர்களாக அவதரித்தன. எவர்க்கும், தெய்வ நிச்சயத தெளிவில்லை. உள்பொருள் உணராமல் உருப்போட்ட நூற்களும், வாய் வாதங்களுமே அவர்களால் எங்கும் வளர்ந்தன. அமைதி இன்பம் பெரிதும் அழிந்தது.

பிண்டத்தில் பேறுதர, குகா குகா என்பார் இதய குகையில் இருக்கும் நீர், அண்டத்தர்க்கு வாழ்வளிக்க, சீகாழியில் திருஞான சம்பந்தராகத் திருவவதரித்தீர். இப்படியெல்லாம் பெருந்தகுதி மிக்க உம்மை, பெரிய பொருளானவர் என்று கருதி, பெருமாளே! என்று அன்பொடு கூவி அழைப்பம் யாம்.

முற்பிறப்பில் விற்போரும் மற்போரும் செய்த வீணர்கள் இப்பிறப்பில், சொற்போர் துவக்கி நல்லோர்க்குச் சோர்வை அளித்தனர்.

எம்சமயம் ஏற்றம்; மதியற்ற உம்சமயம் மட்டம் என்று மல்லாடுகின்றார் பலர். ஒருவரை ஒருவர் இகழும் சொற்களை, எடுத்து எழுத ஏடும் இடம் தரா. இத்துறையில் அறிவு குழம்பினர். ஆத்திரம் கொண்டனர். அவ்வளவுதான். ஆஸ்திகர் எனும் பெயர்கொண்ட இவர்கள், அடைந்த பயன் யாதும் இல்லை.

தெய்வம் என்று ஒன்று இல்லை. பாடுபடு! பணம்தேடு! பாவையரை நாடு! முன்னிற்கும் இனபமே மோட்சம் என்று, உளறி வழியும் நாஸ்திக வாதம் ஒருபுறம். அடபாவமே! என்ன வேதனைச் செய்தி இது!

'ஆகாயம் என்று ஒரு பூதம் இல்லை. மண், நீர், காற்று, நெருப்பு என்பவைகளின் அணுக்கூட்டமே உலகம். ஆன்மா என்பது ஒருவகையில் உண்டு; ஒருவகையில் இல்லை';

பக்தனிவன் என்று, பகல்வேடம் போடும்முனம்,
சித்தத்தில் தங்கிச், சிவமாக்கிக் கொள்ளாயே!

'அருகன் சரணம் கச்சாமி! என்று, எங்கள் பெருமானை இறைஞ்சுங்கள். கொதி நீரைத் தலையில் கொட்டி, அந்தக் கதகதப்பில் தலைமயிரைப் பிடுங்குங்கள்! நீரில் முழுகினால், வாய் கொப்புளித்தால், பல கிருமிகள் நாசம் ஆகும். ஜீவ காருண்யம் கொள்ளுங்கள்' என்று, மந்திர தந்திர ஜாலம் காட்டும் சமண் சமயிகளின் சதுரங்க ஆட்டத்தை, எவரிடம் சொல்லி ஆறுவது?

இச் சாகசங்களால், எது உண்மையென்று தெரியாமல் ஆன்மாக்கள், ஏமாறல் ஆயினர்.

இந்த ராட்சச சாதனைகள் யாவும் அடங்க, காழியில் ஆளுடைய பிள்ளையாராக அவதரித்து, "வேதநெறி தழைத்தோங்க, மிகுசைவத் துறைவிளங்க, பூத பரம்பரை பொலிய" புனித தேவார மழை பொழிந்தீர். அச் செல்வாக்கால், அருந்தமிழ் நாட்டில் அமைதியை நிறுவினீர்.

அந்தச் சலிகை, நன்றி, வென்றி, மங்களம், பெருமைகள், கனம், குணம், சரவணம், பொறுமை, புகழ், வேல், விருது, மயில்மேல்வரு திருவடிகள், பல விதரணம், திரம், தரம், எண்ணிய வள்ளியம்மை மேல் எய்திய பற்று, பல விஜயங்கள் எனும்பெயரால் அடியவர்கட்கு அளித்த, அளிக்கின்ற, அளிக்கும் காட்சிகள் ஆகிய பதினாறு பேறுகளையும், அன்பால் என்றும் ஓதி ஓதி, உமது சொரூப தடத்த இயல்புகளை உணர்கின்றேம் யாம் என்று, விநயம் காட்டி வீழ்ந்து பணிந்து விண்ணப்பித்தபடி.

வாழ்க திருப்புகழ் வளம்.

ஓம்.

அன்புடையார் சொற்கள் அமுதாய்ச் செவியில்விழ,
இன்புறு கின்றமனம், எம்மான் அருளுதியே!

குமாரஸ்தவ விளக்கம்

(திருப்புகழ் சதுரர் சே. த. ராமலிங்கம் பிள்ளை, B.A.,B.T.)

பூதி பதயே நமோநம:

(1) பூதி பதயே - ஐஸ்வரியத்தின் தலைவனுக்கு; நமோநம: போற்றி! போற்றி!

பூதி:

பூதி என்றால் ஐசுவரியம் அல்லது செல்வம். ஆகவே ஐசுவரியம், அருட்செல்வம் பொருட்செல்வம் இரண்டையும் குறிக்கும். ஆனால் ஐசுவரியம் என்பது ஈசுவர சம்பந்த முடையது. ஆதலின் அருட்செல்வம் என்றே கொள்வது சிறப்பு. மேலும் அருட்செல்வம் பொருளைவிடச் சிறந்தது. பொருட்செல்வம் அருட்செல்வர்களைத் தானே நாடி வந்து அடைவது.

> " அருட்செல்வம் செல்வத்துட்செல்வம்
> பொருட்செல்வம் பூரியார் கண்ணுமுள "

என்பது வள்ளுவர் வாக்கு. பூதி - ஐசுவரியம்—அருட் செல்வம் என்ற பொருளிலேயே " பூதிதரும் இலிங்க பூசனை" என்று காஞ்சி புராணத்திலும் ஆளப்பட்டுள்ளது. இப்பொருளில் 'பூதிபதி' என்பது அருட்செல்வ நாயகன் என்றும், அவனுக்கு வணக்கம் கூறியதாகவும் கொள்ள வேண்டும்.

(2) பூதி என்று விபூதிக்கும் பெயர். 'விபூதி பூதிர் ஐசுவரியம்' என வருதலின், வி - மேலான, பூதி - செல்வம். வெண்ணீறு மேலான செல்வமாதலின் அப்பெயர் பெற்றது; பூதி பதயே என்னும்போது வெண்ணீறு சண்ணித்த மேனியனாகிய வேலனுக்கு என்றும் கூறலாம். முருகவேள் பொன்னார்

பொய்யுடலன், பொய்ம்மொழியன், பொய்யுளத்தன் ஆனாலும், மெய்யுடையார் நட்பென்றும் மேவ்வருள் செய்யாயே!

மேனியில் பால்வெண்ணீறு புனைந்துள்ளான் என்பது. விபூதி அபிஷேகத்திற்குப் புகழ்பெற்ற பழநித் திருப்புகழ்,

" நீறுபடு மாழைபொரு மேனியவ வேல!" என்று பாடிக் களிக்கிறது.

(மாழை பொருமேனி - பொன்னார்மேனி.)

மேலும் ஆண்டவன் அபிஷேக விபூதிக்குப் பழநி சுவாமிமலை முதலிய தலங்கள் சிறப்பித்துப் பேசப்படும் உலக வழக்கத்தையும் உன்னுக.

(3) பூதி என்று பூமிக்கும் பெயருண்டு. பூதி என்பது அண்டங்களனைத்தையும் குறித்ததென்க. பூதி பதி - அகிலாண்ட கோடி பிரம்மாண்ட நாயகன் என்று கூறுக. ' நவலோகமுங் கைதொழும் நிசதேவ '

'பதினாலுலகத்துறு பக்தர்கள் ஏது நினைத்ததும் மெத்த அளித்தருள் இளையோன் ' என்பர் அருணகிரியார்.

(4) பூதி - அநுபூதியுமாம். அநுபூதி என்ற சொல் முதற்குறைந்து பூதி என நின்றது. அநுபூதி - அருளநுபவம். பூதிபதி என்பது அடியவர்கட்கு அருளநுபவமான அநுபூதி நல்கும் அண்ணல் என்று கிடைக்கிறது. அருணகிரிப் பெருந்தகையைப் பேசா அநுபூதி அடைவித்து ஆண்ட வகையைக் கந்தரநுபூதி பாடிப்பாடிக் களிக்கிறது.

" தூசா மணியும் துகிலும் புனைவாள்
நேசா முருகா நின்தன் பருளால்
ஆசா நிகளம் துகளா யினபின்
பேசா அநுபூதி பிறந்ததுவே."

என்உயிரே! எம்மானே! எந்தையே! நின்னடியை
உன்னார்கட்(கு) இன்பம், ஒருநாளும் இல்லையரோ.

" ஆணவ அழுக்கடையும் ஆவியை
விளக்கி அநுபூதி அடைவித்ததொரு
பார்வைக்காரனும்......வேலைக்காரனே"

என்றும் அருணகிரி முனிவர் அருளியுள்ளார்.

" கந்தரநுபூதி பெற்றுக் கந்தரநு பூதி சொற்ற
எந்தைஅருள் நாடி இருக்குநா ளெந்நாளோ"

என்பர் தாயுமானுர்.

மேலே கூறியவற்றிலிருந்து பூதிபதி என்பது (1) அருட் செல்வமான ஐசுவரியமுதவும் ஈசுவரன். (2)வெண்ணீறணிந்த வேலவன். (3) அகிலாண்ட கோடி பிரம்மாண்ட நாயகன். (4) அநுபூதி அருளும் ஆண்டவன் என்றெல்லாம் பொருள் கொள்ள நிற்பதை எண்ணுந்தோறும் நம் இதயம் நெகிழ்கிறதல்லவா ?

---

8. அருணகிரிநாதரின் இளமையும் முருகவேள் அவரை ஆட்கொண்டதும்

(தணிகைமணி. வ. சு. செங்கல்வராய பிள்ளை, M. A.)

இங்ஙனம் சிவம் பொலியும் இந்த அருணைமாநகரில் செங்கை வேற்பிரானை முன்பு நோற்ற தவமெலாந் திரண்டு ஒரு திருக்கோலமாய் வந்த பெரியார் ஒருவர் வாழ்ந்தார். அவருடைய பெயர் இன்னது, அவரைப் பெற்றோர் இன்னர், குலம் இன்னது என்பவை தெரியவில்லை. அவர் வாழ்ந்த காலம் பிரபுடதேவராஜன் காலம் என்பது மாத்திரம் தெளிவாகத் தெரிகிறது.

பிரபுடதேவராஜன் காலம் 15-ஆம் நூற்றாண்டின் தொடக்கம் என்ப.

ஐந்தொழிலால், ஞாலத்தை ஆட்டிப் படைக்கின்ற
தந்திரத்தைக் காண,அருள் தந்தாய்நின் தாள்சரணே!

அவர் இளமைப் பருவத்தில் நல்லது இது, தீயது இது என்று தெளிவு பெறுமல் சிற்றின்பத்தில் ஆர்வமுற்றிருந்தார். உடல் நலத்தைக் கவனியாது இருந்தமையால் பெருநோயுற்று வாட்டமடைந்தனர். விளக்கிற்பட்ட விட்டில் போல ஆயு தன் நிலையை எண்ணி எண்ணி மனம் நொந்தனர். அவரைக் கண்டோர் "ஐயோ பாவம்" என்று இரங்கினர். ஒருநாள் இரவு அருணைத் திருக்கோயிலில் அர்த்தசாம பூஜை முடிந்து, திருக்கோயிலின் கதவும் சாத்தப்பட்டிருந்தது. இவர் "வேல் மயில் வேல்மயில்" என்று கூறி, உடலசைத்து எழுந்து, நெஞ்சில் எழுந்த ஊக்கமே ஊன்றுகோலாக, ஆறெழுத்தை ஓதினபடியே திருக்கோயிலுக்குச் சென்றனர். திருக்கதவும் அடைத்திருப்பதைக் கண்டு, கோபுரத்தின் மேலேறி "இறைவ! இவ்வேளை என்னைக் காத்தருள்க" என வேண்டிக் கந்த மந்திரத்தை ஓதினர்; கண்ணிரண்டையும் மூடினர்; அரோஹரா ஒலியை எழுப்பினர்; "குகா நமோ நமோ நீயே தஞ்சம்" எனக்கூறிக் கோபுரத்தினின்றும் குதித்தனர்.

"இந்தவேளை அஞ்சல் அஞ்சல் என்று கொண்டென் முன்னம்நீ
வந்து காள ஞஇரந்து மௌன யோகர் வாழ்வெனும்
கந்த மந்தி ரம்ப கர்ந்து கண்ணி ரண்டு மூடிநீள்
அந்த ரங்க லங்கவே அரோகரா என்றார்ச் சதுமே." (914)

"சகல லோக கார ணசொல் சர்வ மங்க ளாகரா
புகல டைந்த நாயினேனென் புன்க ணேய கற்றெனுச்
சிகர கோபு ரத்தினின் று சேவல் வேல்நல மயிலெனுக்
குகந மோந மோந மோந மோஎனக் குதித்தனர்." (915)

பின்னைப் பிராயமுதல், பெம்மான் நினையுணரும்
உள்ளத்தைத் தந்தஅருள், ஊன்றியுணர் கின்றேனே!

அவர் தரையில் விழுமுன் முருகப் பெருமான் "அஞ்சல் அஞ்சல்" என்று கூறித் தமது திருக்கரத்தால் அவரைத் தாங்கினர்.

"கொஞ்ச முங்க லக்க மின்று கோபு ரத்தி னின்று'நீ
தஞ்ச' மென்று பாய்ந்த அன்பர் தரணிமீது வீழுமுன்
செஞ்ச தங்கை கிண்கி ணென்ன செஞ்சிலம்ப லம்பவந்
தஞ்சலஞ்ச லென்று கந்தன் அங்க ரங்கொ டேந்தியே."(916)

அங்ஙனம் தாங்கிய பெருமான் "அன்ப!நீ முற்பிறப்பில் மாதர்களின் இன்பத்தை வேட்டிருந்தாய்; அதன்பயனுய் இன்ப துன்பங்களுக்கு ஆளாய் வாடினுய்; இனி, என்நாளும் இன்பமே உனக்கு" எனக்கூறித் தமது மலர்க்கரத்தால் தம் அடியார் உடம்பைத் தடவிக் கொடுத்தார்.

"அன்ப முற்பி றப்பில்நீ அணங்க ளூர்தம் போகமாம்
இன்பம் வேட்டி ருந்த தாலின் றெண்ணி லின்ப மெய்திநீள்
துன்ப முற்று வாடி னுய்நின் துன்பம் யாவும் போக்கினேம்
வன்பு கொள்ளெ னுவி டாம லர்க்கரத்து நீவியே." (917)

பின்னர், அவரது நோய் யாவும் நீங்குமாறு அருளினர்; அவர் நாவினில் வடிவேல்கொண்டு ஆறெழுத்தைத் தீட்டினர். "நாட்டினின் பல தலங்களுக்கும் சென்று எமது புகழை நவிலுக" எனக் கூறிப் பின்னுங்கேள். "உனது பெயர் "அருணகிரிநாதன்" என்று என்றும் விளங்குவதாகும்" எனக் கூறினர். அப்போது அருணகிரியார் 'அத்தனே! தமியேனை ஆட்கொள வந்த முருகையனே! இத்தமியேன் உனது புகழை ஓதுமாறு எங்ஙனே?" என இரந்தனர்; "முத்திதரு பத்தி" என ஓதுக என்று கூறிப், பெருமான் ஒல்லென மறைந்தனர்;

தாயிற் பொறுமைத் தகவுடைய நின்னருளை,
வாயால் வழுத்தற்கு, வாய்ப்பையருள் எந்தாயே!

பொழுதும் விடிந்தது. அருணகிரியார் நீராடித் திருக்கோயிலிற் புகுந்து மயில்வாகனப் பெருமான் சந்நிதியில் நின்று பெருமானை வணங்கி "முத்திதரு பத்தி" எனத் தொடங்கும் திருப்புகழ்ச் சந்தப்பாவை அருமையான இனிய ராக தாளத்துடன் பாட, இறைவன் கலபமஞ்ஞை மேல் வள்ளிகுஞ்சரி சமேதனும் நிர்த்தமாடி, "ஆனைமுக அண்ணலைத் துதித்துத் திருப்புகழ்ப் பாடுக" என்றருளி, யோக நிலையை அவருக்கு விளக்கி, செபமாலை தந்து, திருவடி தீக்ஷை செய்து ஒல்லென மறைந்தனர். அருணகிரியார் இறைவன் கட்டளைப்படி விநாயகப் பெருமானை வணங்கி, 'கைத்தல நிறைகனி' ஆதிய திருப்புகழைப் பாடித் துதித்தனர். பின்னும் திரு அண்ணாமலையில் நாலு திக்கிலும் உள்ள கோபுரங்களில் உள்ள முருகவேளுக்குப் பல திருப்புகழ்ப் பாடல்களைப் பாடினர். ஓரிரவிலே இங்ஙனம் ஞானப் புலவராய் விளங்கின பெரும்பேற்றைக் கண்ட அடியார்கள் பரவசப்பட்டு முருகன் திருவருளையும், அருணகிரியாரின் தவப்பேற்றையும் வியந்து வியந்து கொண்டாடினர்.

இவரது நோயைக் கண்டு முன்பு விலகினவர்கள் இப்பொழுது இவருடைய பொன்போன்ற திருமேனியின் பொலிவைக் கண்டும், இவர் ஆசு கவியாகப் பாடும் சந்தக் கவிகளைக் கேட்டும் வியப்பும் அச்சமும் கொண்டவர்களாய், 'நாங்கள் தங்கள்பால் முன்னிழைத்த பிழைகளை மன்னிக்க வேண்டும்' என வேண்டினர். 'அங்ஙனே ஆகுக' எனப் பெருமானும் ஆசி கூறினர்.

இவ்வற்புத நிகழ்ச்சியைக் கண்ட அருணை வாசிகள் மகரதோரணப் பந்தல்கள் அமைத்தனர்; மலர்மாரி சொரிந்தனர்; பூரண கும்பம் வைத்தனர்; அகிற்புகை நறுமணம்

என்னினு லும்பொறுக்கும் நின்னருளே, எம்மானே!
உள்ளினு லும் இன்பம் ஊற்றெடுத்தல் கண்டேனே!

எழுப்பினார்; நகரை அலங்கரித்தனர்; திருக்கோயிலுக்குச் சென்று "எமை உய்விக்க வந்த மாதவம் மிக்க வள்ளலே வருக" என இரந்தனர். அருணகிரியாரை முத்துப் பல்லக்கி லேற்றி 'அரகர' என்னும் முழக்கத்துடன் திரு அருணை வீதி களில் உலாவரச் செய்தனர். இதை அறிந்த பிரபுடதேவ ராஜனும் பவனியிற் கலந்து இவரை எதிர்கொண்டழைத்துத் தமது அரண்மனையில் விருந்திட்டனன்; உலகோர் அவரை, "சேந்தன் வரதிரு கடாட்சமிகு மதுர முத்தமிழ் வித்வ மகா கவிச் சரபம்" என்று புகழ்ந்து கொண்டாடினர். அருண கிரியார் பின்னர் முருகவேள் எழுந்தருளியுள்ள தலங்களைத் தரிசிக்க திரு அண்ணாமலையை விட்டுப் புறப்பட்டனர்.

அநுபூதி விளக்கம்

அகந்தையை அரிதல

[கி. வா. ஜ.]

வடிவேற் பெருமானுடைய அடியார் கூட்டமாகிய பரிவா ரத்தைச் சேர்ந்தவன் என்ற பதவி வேண்டும்; அதற்காக முயற்சி செய்வது அவசியம். இந்தக் கருத்தைத் தம் மனத்தை நோக்கி அறிவுறுத்துபவரைப் போலச் சொல்லுகிறார் அருணகிரிநாதர்.

முருகன் எல்லாருக்கும் தலைவன். யாராவது பெரியவர் களாகத் தலைவர்களாக இருந்தால், "மலைபோல அவர் இருக் கிறார்" என்று சொல்வது உலக வழக்கு. எவ்வளவு பெரிய தலைவராக இருந்தாலும் முருகனுக்கு முன் எம்மாத்திரம். ஒரு மலையே நிமிர்ந்து நின்றது. சூரபதுமனுக்குப் பலமாக இருந்தது. ஓர் அசுரனே அந்த மலை வடிவில் நின்றான்.

ஐந்தெழுத்தால நின்னை அழைத்துத் தொழுதாரை,
சிந்திக்கும் மெய்யருளைச் சிந்தனைசெய் கின்றேனே!

தன்னினும் உயர்ந்தவர் இல்லை என்ற மனோபாவமே மலையாக மாறியதோ ? அந்த மலையை முருகன் தன் கூரியவேலை விட்டு அழித்தான். எல்லோருக்கும் பெரிய இறைவனாக நிற்பவன் அவன். அவனுடைய பின்னே செல்லும் பரிவாரம் என்ற பதவியே நமக்கு வேண்டும். மற்ற எந்தப் பதவியும் நிலை பெறாது. சில காலம் இருப்பதுபோல இருந்து போய் விடும். 'ஏ மனமே, இந்தப் பதவியையே நீ விரும்புவாயாக!' என்பது அருணை முனிவர் உபதேசம்.

" கிரிவாய் விடுவிக் ரமவேல் இறையோன்
பரிவா ரம்எனும் பதம்மே வலையே
புரிவாய் மனனே !"

ஒருவனுக்கு அடிமையாவதற்குப் பொதுவாக மனிதனுக்கு விருப்பம் இருப்பதில்லை. கொஞ்சம் கையில் பணம் சேர்ந்து விட்டால், " அந்தப் பயலிடம் போய் நான் நிற்பேனா?" என்று சொல்லத் தோன்றிவிடும். பணிவு நம்மிடமிருந்து அகன்று விடும். அகந்தையே மயமாகி விடுவோம். பணிவுக்குப் பகை அகந்தை. பணம் படைத்தவனாக இருந்தாலும் பணிவு பெறா விட்டால் பயன் இல்லை. அது இருந்தால் அவனுக்குப் பின்னும் செல்வம் கூடிவிட்டது போன்ற நிலை உண்டாகும். அதனால்தான் வள்ளுவர்,

" எல்லார்க்கும் நன்றும் பணிதல் ; அவருள்ளும்
செல்வர்க்கே செல்வம் தகைத்து "

என்று பாடினார்.

இறைவனை வணங்காமல் பலர் இருப்பதற்கும் இவ்வகந்தையே காரணம். அது போனால்தான் 'நாம் இறைவன் அடிமை' என்ற உணர்வு வரும். இல்லையானால் நாம் பலவற்றையுடைய தலைவர் என்ற எண்ணமே மீதூர்ந்து நிற்கும்.

அல்லும் பகலுமுனை ஆரா தனைசெய்யும்
வல்லாளர் அந்தணரை, வாய்வாழ்த்து கின்றதுவே.

இறைவனுடைய அடியவர்கள் தம்மை ஒன்றுக்கும் பற்றாத சிறியவர்களென்று சொல்லிக் கொள்வார்கள். நாமோ, "நான்" என்று மார்தட்டிக் கொண்டிருக்கிறோம்.

ஏதோ சம்பரதாயத்துக்குச் சில சமயங்களில் திருக் கோயிலில்சென்று இறைவனை வழிபடுகிறோம். அவனே நமக்கு உண்மையான தலைவன், என்ற உணர்வு நம் உள்ளத்தின் ஆழத்தில் பதியவில்லை. நாம் அவனைத் தலைவனாக உணரா விட்டாலும் அவன் நம்மை மறப்பதில்லை. நமக்கு வேண்டிய வற்றையெல்லாம் வழங்கிக் கொண்டிருக்கிறான். நமக்கும் அவனுக்கும் உள்ள தொடர்பு அறாது.

ஆனால் நாம் இதை உணர்வதில்லை. நாம் ஓர் அரச னுடைய நாட்டில் வாழ்கிறோம். அவனுடைய குடிமக்களுள் ஒருவராக இருக்கிறோம். அவனுடைய பரிவாரமாகவில்லை. அரண்மனைச் சேவகம் என்றால் எவ்வளவு உயர்வு? சொந்தத் தொழில் நடத்துகிறவனுக்கு நல்ல அரசாங்கம் பல பாதுகாப்புக் களை அளிக்கும். ஆனாலும் தொழில் செய்வார் எல்லோருக்கும் லாபம் கிடைக்கிறதில்லை. அதை நிர்வகிக்கும் பொறுப்பு வரவர அதிகமாகிறது. அப்படியின்றி மாதம் மாதம் அரசாங் கச் சம்பளம் மிகுதியாக வரும். பதவி ஒன்று கிடைத்தால் எவ்வளவு சிறப்பாக இருக்கும்!

அந்த வகையில் முருகனுக்குத் தொண்டு புரிந்து, அவனு டைய பரிவாரத்தில் சேர்ந்து நமக்கு வேண்டிய எல்லாவற்றை யும் அவனே தர வாழும் பதவி எவ்வளவு உயர்ந்தது? நமக்குப் பொறுப்பு இல்லாமல் எல்லாவற்றையும் அவனிடம் ஒப்ப டைத்து விடலாமே.

வஞ்சகமாம் வாழ்க்கை வலிந்தீர்த்தல் செய்தாலும்,
நெஞ்சத்தால் நின்னை நினைக்கஅருள் செய்யாயே!

" தன்கடன் அடியேனையும் தாங்குதல்
என்கடன் பணி செய்து கிடப்பதே "

என்பது அப்பர் திருப்பாட்டு.

இந்த நிலையின் அருமை தெரியாமல், "நான் பலருக்குத் தலைவனாக இருக்க வேண்டும்" என்று ஆசைப்படுவது அகந்தையின்பாற்படும். அது போனால்தான், சர்வசங்க பரித்தியாகம் செய்து இறைவனையே தனித் தலைவனாகக் கொண்டு, அவனுடைய பரிவாரமாக நிற்கவேண்டும் என்ற ஆர்வம் உண்டாகும். அதனால் அந்த அகந்தையை அரிந்து விடவேண்டும் என்று சொல்லுகிறார் அருணகிரியார்.

நல்ல உபதேசங்களைக் கேட்கும் போதும், நல்லவர்களோடு பழகும் போதும் நம்மிடத்தில் உள்ள அகந்தை சற்றே மறைந்து நிற்கும். நல்லவர்களிடமிருந்து சற்றே விலகிப் போனால் மறுபடியும் தலை தூக்கும். ஆகையால், சில காலம் நான் என்ற செருக்கின்றி இருக்க நேர்வதை எண்ணித் திருப்திப்பட்டுக் கொள்ளக் கூடாது. அகந்தையை அடியோடும் அரிந்துவிட வேண்டும். அது சிறு பொறியளவுக்கு நின்றாலும் மறுபடியும் காட்டுத் தீபோலப் பரவி விடும்.

" அரிவாய் அடியோடும் அகந்தையையே."

அகந்தையெனனும் கிழங்கு நம்மிடம் ஆழமாக வேரூன்றி நிற்கிறது.

" அகந்தைக் கிழங்கை அகழ்ந்தெடுக்கும்
தொழும்பர் "

என்று பாடுவார் குமரகுருபர முனிவர். அதனை அடியோடு அகழ்ந்து எறிய வேண்டும்.

அதற்கு வழி என்ன? ஞானமென்னும் கோடரி கொண்டு அதை அரியவேண்டும். ஒரு நாள் இரண்டு நாள் முயன்று

தாழ்வு படுத்தும் சகமாயை நீக்கி,எனை
வாழ்விக்கும் நின்னை மனம்மறக்க மாட்டாதே!

அதைப் பறித்து எறிய முடியாது. அது ஒரு நாள் இரண்டு நாட்பயிரா? அல்லது சில ஆண்டுகள் வளர்ந்த பயிரா? எத்தனையோ காலமாக, அநாதி காலமாகவே, நம்மோடு இருந்து ஆழமாகவே வேரூன்றிச் சிறிதும் தளர்ச்சியின்றி நிற்கும் முள்மரம் அது. அதன் நிழலில் எந்த நல்ல பயிரும் வளராது. அதை மெல்ல மெல்லப் பறித்து எறிய வேண்டும். பெரிதும் முயன்று சலித்துப்போய், "இருந்தால் இருக் கட்டுமே!" என்று விடக்கூடாது. விட்டால் இவ்வளவு தூரம் முயன்றதும் வீணாகிவிடும். ஆகையால் பொறுமை யோடு நின்று ஞானமென்னும் கோடரியை நன்கு தீட்டிக கொண்டு அதை வெட்ட வேண்டும். நம்முடைய பொறுமை யும் ஞானமும் இணைந்து ஒன்றாகி விடவேண்டும். அப்போது தான் நாம் மேற்கொண்ட காரியம் பலிக்கும்.

"பொறையாம் அறிவால்
அரிவாய் அடியோடும் அகந்தையையே"

என்று வழி சொல்லிக் கொடுக்கிறார் அருணகிரி வள்ளல்.

அவ்வளவு பெரிய கிரவுஞ்ச மலையைப் பொடியாக்கிய முருகன் தன் கையில் ஞானத்தையே வேலாக வைத்திருக் கிறான். அகந்தையே மலைபோல நிற்கிறது. அதை அழிக்க ஞானமே வேலாக வந்தது. அந்த வேலவன் துணை நிற்பான. அவன் பரிவாரமாக வேண்டும் என்று ஆசைப்பட்டால ஞானம் உதயமாகும். அது மறையாமல் அதற்குத் தடையாக வருவனவற்றை சகித்துக் கொள்ள வேண்டும். இநதப பொறை, ஞானத்தைக் கூர்மையாக்கி அகந்தையை அடி யோடு அழிக்கும்படி செய்யும்.

இப்போது அருணகிரிநாதருடைய முழு உபதேசத்தையும் பார்க்கலாம்.

மாயையைப் பற்றி மனமிருக்கும் என்பர்;அந்த
மாயைதான் நீங்க, மனமிறந்து போகிறதே!

" கிரிவாய் விடுவிக் ரமவேல் இறையோன்
பரிவா ரம்எனும் பதம்மே வலையே
புரிவாய் மனனே, பொறையாம் அறிவால்
அரிவாய், அடியோ டும்அகந் தையையே "

[மனமே, நீ கிரௌஞ்சமலையின் மேல் விட்டு அதை அழித்த வெற்றி வேலையுடைய இறைவனுக்குப் பரிவாரம் என்று பெருமையோடு சொல்லிக் கொள்ளும் பதவியை அடைவதையே விரும்பி, அதற்குரிய முயற்சிகளைச் செய் வாயாக! அதற்குத் தடையாக இருக்கும் அகங்காரத்தைப் பொறுமையாகவே மாறிய மெய்ஞ்ஞானத்தால் அடியோடும் அரிந்துவிடு.

கிரி - கிரௌஞ்சமலை. விடு என்று சொன்னாலும் விட்டு அழித்த என்று பொருள் கொள்ள வேண்டும். விக்ரமம் - வெற்றி. பதம் - பதவி. மேவல் - அடைதல். புரிதல் - விரும்புதல், செய்தல்; இங்கே இரண்டையும் இணைத்து விரும்பிப் புரிவாய் என்று கொள்ளுதல் சிறப்பு. பொறையாக மாறும் ஞானம். அரிவாய் என்றதால் அகந்தையைப் பெரிய மரமாகவும், ஞானத்தைக் கோடரியாகவும் உருவகம் செய்ததாகக் கொள்ள வேண்டும்.]

இது கந்தர் அநுபூதியில் 37-ஆவது பாடல்.

பெருமா! நின் பொன்னடியைப், போற்றுமுளத் தார்முன்,
வருமோஅம் மாயைசெயல்? வரட்டங்கொண்(டு) ஓடாதோ ?

வள்ளல் அளித்த வளம்

(அன்பன்.)

பாரத நாட்டின் பக்தர்கள் பலர். அவர்களுள் ஒருவன் மாபலி. அவன் பரம விஷ்ணு பக்தன். ஆதிவராகர் ஆற்றல் அமைந்த பலி, விண்ணில் விரைந்தான். மண்ணில் குதித்தான். பாதலததிற் பாய்ந்தான. விறுவிறுத்தான். மூவுலகையும் வென்றான. ஒரே ஒரு ஊர்க்கு ஒரே ஒரு ராஜா என்பதுபோல், எல்லா உலகங்கட்கும் ஏக சக்கராதிபதி நான் என்றான்.

உத்தம குணத்தை உடையவன் ஆதலின், வலிமையே உரிமையென, அனைவரையும் அடிமைப்படுத்திய தன் தவறை எண்ணிப் பிறகு தளர்ந்தான். அரியதொரு வேள்வியை, திருமாலுக்குப் பிரீதியாக ஆரம்பித்தான். அபகரித்த பொருள்கள் அனைத்தையும், பாவமும் பழியும் படராதபடி, வேள்விக் களத்தில், வாரித் தானமாக வழங்க நினைத்தான். வீர சக்ரவர்த்தியான மாபலி, இப்பொழுது விரதவள்ளல் எனும் பெயருடன் விளங்குகிறான். அவன மனநிலையைத் திருமால் அறிந்தார்.

காசிபர்க்கும் அதிதிக்கும் மகவானார். இப்பிள்ளை போலும் குள்ளம் எவரும் இல்லை; என்ன வியப்பு என்று எவரும் பேசினர். பலர்க்கு நிழல் தந்து, பல பறவைகளின் பசி தவிர்க்கும் பெரியதொரு ஆலமரம் அரிய ஒரு சிறு விதையுள் அடங்கல் போல், எங்கும் வியாபகமான எல்லையற்ற மகா சத்தியுள்ள அக் குள்ள வடிவிலும், ரட்சக சத்தி குறைந்தது இல்லை.

ஏசுதலே ஆனார் இருக்கும் உலகத்தில்,
வீசுகின்ற மாயை விலாசமறிந் திட்டேனே.

இப் பிரமசாரி கோலத்துடன் பூணூல். புல்லரை ஞாண். நவிற்றும் மந்திர நா. அக்கினி வளர்க்கும் அரியகரங்களை வீசி நடந்தது பிள்ளை. பிரமதேஜஸ், அதன் முகத்தில் பிரதிபலிக்கின்றது.

இந்த விசித்திரக் குள்ளரைக் கண்ட மாபலி, எழுந்து விநயமொடு எதிர்கொண்டான. உம்மைப் போன்ற உயர்ந்த அந்தணர், யான் அறிந்த அளவு, எந்த உலகிலும் இல்லை. உம்மை எதிர்கொள்ளும் எம்போல மேலோரும் இல்லை என்று, கூப்பிய கரங்களால் கும்பிட்டான்.

மாபலீ! பக்த வள்ளலான உன்னிடம், கை ஏந்துபவர் பாக்கியசாலிகள். விரும்பிக் கேட்ட பொருள்களை, உனது கைகள் குதூகலித்துக் கொடுக்கும்; அதை அறிந்தே அணுகினேன் என்றார் வாமனர்.

யாது வேண்டும்? கேளுங்கள்! என்று படபடத்தான் மாபலி!

மூன்றடி மண்வேண்டும்! உன்னிடம் இருந்தால் உதவுக என்று, வாமனர் இருகரங்களை எதிரில் நீட்டினர். தந்தேன் என்றான் பலி. தடுத்தேன் என்றார் குலகுரு. ஏன் தடுக்கிறீர்? என்று, வள்ளல் அதிர வினவினன்.

மாபலீ! பார் முழுதையும் பட்சணம் செய்த பரந்தாமன் இவன். ஏதோ சூழ்ச்சியை எண்ணி, இரு கரங்களையும் உன் முன் நீட்டுகின்றான்; எச்சரிக்கிறேன்! இதன் மூலம், அசுர வாழ்வே அஸ்தமித்துவிடும் என்று சுக்கிரன் அலறினன்.

நானகு திசைகளிலும் எதிரொலியெழ, மாபலி நகைத்தான். ஆசார்ய! படியளப்பவன் கை தாழ்கிறது. ஏற்க வேண்டிய என்கை மேல் ஏறுகிறது. இப்படி ஒரு அதிசயம், என் சரித்திரத்தில் இடம் பெறும். மற்றவர் வாழ்வுபெற,

---

கல்லாகிப் புல்லாகிக் காசினியில் உற்றாலும்,
எல்லாம் நலத்திற்கே என்றறிந்தேன் எம்மானே!

ஊம் தாழ்வை யடைவதில் தவறு இல்லை. குல முன்னேற்றம் என்று கூவி, பலரைப் பின் தள்ளும் பாவம் வேண்டாம். கொடுப்பதை விலக்கும் கொடியவரே! நீர் சும்மா இரும்!

வாமன அந்தணரே! நீர் வாரும்! அடி ஒரு மூன்றும் அளந்து கொள்ளும் என்று, தாமரைப் பொய்கை நீரை அள்ளித் தாரை வார்த்தான் மாபலி.

என்ன வியப்பு! எவரும் காண எதிரில் இருந்த குட்டை வடிவம், நெட்டையாகி நிமிர்ந்தது. வரவர மேல் நோக்கி வளர்ந்தது. ஒரு பாதம் நிலத்தில் ஊன்றியது. மற்றொரு பாதம், உயர்ந்து விரிந்து உலகம் முழுதும் நிரம்பியது. அளாவிய இரு அடிகளால், விண்ணை மண்ணை அளந்தபின், மூன்றாவது அடிக்கு என் முடியுளது என்று, தலையை மாபலி தாழ்த்தினன். அதன்பின், 'எந்த உலகும், எந்தப் பொருளும், எவர்க்கும் பந்தமன்றிச் சொந்தம் அல்ல; எவரும் உமது அடிமைகள். நீலமேக சியாமள வர்ணா! எவையும் உமது உடைமைகள்' என்று, இரு கரங்குவித்து இறைஞ்சினன்.

அசுர சக்தியிடம் இருந்து மீட்ட உலகங்களை, உத்தம தேவ சக்தியிடம் திருமால் ஒப்படைத்தார். வள்ளல் மாபலிக்கும் பேறு வழங்கினார். ஆண்டவனுடைய அளவிறந்த ஆடல்களுள் இது ஒன்று.

வள்ளல் மாபலி நல்லவன். எனினும், அசுர சூழ்நிலையால் ஆக்ரமிப்பு எழுப்பினன். அவனால், மூன்று உலகங்களும் மூடி துறந்தன. கவர்ந்த உலகங்களை, நிர்வகித்தவர் அசுரக் கயவர்கள். அதனால் எங்கும் அராஜகம் எழுந்தன. அதை மாபலி அறிந்தான். கொடிய அசுர செல்வாக்கைக் குறைக்க நினைத்தான். தன்னதான எதனையும் தானம் செய்தால், அதன்பின் கொட்டம் அடங்கும். புண்ணியமுண்டு.

எல்லார்க்கும் நல்லவன்நீ! என்கின்ற மேலோர்தம்
சொல்பொருளை எண்ணிச், சுகிக்கின்றது) என்மனமே!

தனக்குப் புகழும் உண்டு என்றது புந்தி. அவன் கருத்தறிந்த நாரணர், நீதியுள அவன் எண்ணத்தை நிறைவேற்றினுர். இவ் வரலாற்றின் ஒவ்வொரு பகுதியும், உணரத் தக்கவை. உணர்ந்து ஒழுகத் தக்கவை.

இயற்கை ஆஸ்திகம், இவ்வரலாற்றை நினைத்து நெஞ்சம் நெகிழ்கிறது. போலி ஆஸ்திகம், இடைப்புகுந்து குட்டையைப் பெரிதும் குழப்புகின்றது.

'உலகளந்த போது, வாமனர் அடிக்கீழ் சிவனுர் அடங்கினுர்; அவர் உலகை உண்ட போது, உதரத்துள் ஒடுங்கினுர். உலகளக்க மேல் நீண்ட திருவடியை, அயன சத்திய உலகில் இருந்து, கமண்ட நீரால் அபிஷேகித்து வழிபட்டான். இறங்கிய அந்நீரை, சிவன், தன் திருமுடியில் ஏற்று, கங்காதரன் ஆயினேன் என்று களிக்கூத்தாடுகிருன' என்று, கெக்கலி கொட்டி மகிழ்கிருர் ஒரு குறும்பர். இவர் வாதம் மூலவரலாற்றில் இல்லை.

'ஏய்! ஏய்! கேள். பிரகிருதி மாயன் திருமால் என்று, சுருதிகள் பேசுகின்றன. அந்த மாயைக்கு அதீதர் எங்கள் சிவபெருமான'

'அனபர்கள் சிவபெருமானை அபிஷேகிக்கின்றனர். அத் தீர்த்தத்தில், மூழ்கி எழுந்து முறுவலிக்கிருர் உங்கள் முகுந்தர். இதனுல் நாரணர் என்னும் பெயரும் தாங்கினுர். சர்வசங்கார காலத்தில், மங்கி மறைந்தார் உங்கள் மாதவர். எங்கள் சிவபிரான அடியைத் தரிசிக்க, உங்கள் ஆதிவராகர் பட்ட பாட்டைப் பாரறியும்' என்று, எழுந்து குதிக்கிருர் இளஞ்சைவர்.

வாதம் வளர்கிறது. மோதல் முதிர்கிறது. எதையும் முறையாகக் கற்பது இல்லை. தம் சமயபரமான ஆயிரத்தெட்டு நாமங்களை உருவேற்றி உய்யலாம். அதுவும் செய்வது இல்லை.

குறைபலவே செய்யும் குணமுளரைக், காலத்தால்
நிறைவில் இழுத்தே நியதிவிளைக் கின்ருயால்.

'பூதகியின் விஷப் பாலுண்டார் புருடோத்தமர்; அதைப் பருகியும், குறையின்றி இருக்கும் மங்களர் நாரணர்' என்று, குறுநகை செய்கிறார் ஒருவர்.

'உண்ட ஆலகாலம், கண்டத்தில் தடைப்பட்டும், இறவாச் சிவனார் ஏற்றங்காண்!' என்று பேசுகிறார் எதிர்வாதி.

'அகில உலகையும் ஆட்டிப் படைத்த இராவணனை, எங்கள் திருமால் அழித்திலரேல், உய்யுமோ இந்த உலகம்!' என்று குமுறி வழிகிறார் ஒருவர்.

'கயிலை மலையைப் பெயர்த்த இராவணனை, கட்டை விரலால் ஊன்றி, அவன் பக்க எலும்புகளை நொறுங்கச் செய்து, அவன் அழுதல் கண்டு, இராவணன் என்ற பெயரோடு உலவ விட்டார் எம் சிவனார். இதை அறியாயா நீ?' என்று அதிர்ந்தார் மற்றவர்.

'குணடலியாம் பாம்பின்மேல், பள்ளிகொண்டார் எம் பரந்தாமர். யோக முதல்வர் அவர்!' என்று ஒருவர் உறுமினார்.

'வாயை முதலில் கழுவும். அப்பாம்பை, கங்கணமாகக் கரத்தில் அணிந்தவர் எம் சிவனார். இதை முதலில அறிந்து கொள்ளும்' என்று, எதிர்குரல் எழுப்பினார் மற்றவர். இப்படியே ஏசல் பாட்டுப் பாடும் ஏழைகள் போல், சிவநிந்தை விஷ்ணு நிந்தை செய்வார் பேசும் பேச்சுக்களை எல்லாம் தொகுத்துக் கொண்டு, மொழிவளம் சமயநலம் ஒன்றும் அறியா மூர்க்கங்கள், நாத்தடிப்பேற நாஸ்திகம் பேசுமேல், இக்குற்றத்திற்குப் பொறுப்பேற்க வேண்டியவர்கள் நாம் என்பதை, ஆஸ்திக உலகம் அறிய வேண்டும் என்று, விநய பூர்வமாக விண்ணப்பிதது்க் கொள்கிறோம்.

வாழ்க சமரச வழிமுறை.

ஓம்.

குற்றமே செய்வாரைக் கூட்டித் திருத்தற்கு
சிற்றம் பலத்திற் சிரிக்கின்றாய் மெய்ச்சிவமே!

ஸ்ரீ ராமனின் சிறந்த பண்பு

[ஆ. கி. ரங்கராஜன்.]

அவனியில் அதர்மத்தை ஒழித்து, அறநெறியை நிலை காட்ட அச்சுதன் அவதரித்த அவதாரங்களுள், ஸ்ரீராமாவதாரம் தனிச் சிறப்புடையதாகும். ஸ்ரீதரன் ஸ்ரீ ராமனாக அயோத்தியில் அவதரிக்கையில், தனது மாயா சக்திகளை எல்லாம் வெளிக்காட்டிக் கொள்ளாமல், யாதுமறியாத சாதாரண மானிடனாகவே நடித்தனன். ஆயினும் அவனது கருணை நிலை அவனியோருக்கு அவன் இறைவன் என்பதை எடுத்துக் காட்டியது.

ஸ்ரீராமன் கபடமற்றவன் போல நடித்திருப்பினும், யோகியர், ஞானியர், முனிவர், அமரர் ஆதியோர் ஸ்ரீராமனின் கல்யாண குணங்களையும் ஆற்றலகளையும் கண்டு, இறைவனென உணர்ந்தனர். ஸ்ரீராமன் எவ்வளவுதான் தனது மாயா சக்தியை மறைதது வைத்திருந்த போதிலும், அவனிலிருந்து அவனறியாதவாறே, தெய்வ ஒளி எங்கும் வீசியது.

அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பதுபோல், எதிலும் கலங்காத அவனது நிலைகண்ட மானிடரும் தம்மையறியாமலேயே அவன் மீது பக்தியும் கொண்டனர்.

பொதுவாகக் கொடியவர்கள் தமது வஞ்சக எண்ணங்களை எவ்வளவுதான் மறைத்துக் கொண்டாலும் எப்படியேனும் அது வெளிக்குத் தெரிந்துவிடவே செய்கிறது. அதேபோல் உத்தமர்களின் தோறறமும் அவர்தம் உயர் நிலையை உலகுக்கு விளக்குகிறது. ஸ்ரீராமனைப் பகைத்தவர்களும் ஸ்ரீராமனின் உன்னத நிலையைக் கண்டு வியந்தனர். பகைத்தவர்பாலும் அன்பு செலுத்த வேண்டும் என்ற உயரிய

பொய்ம்மை நினைவு பொசுங்கி அழிந்தொழிய,
மெய்ம்மை உணர்வொழுக்கம் மேவுவதும் உண்டன்றே.

நியதியை உலகுக்கு விளக்கவே, இறைவன் ஸ்ரீராமனுக அவனியில் அவதரித்தான். இதற்கு ஸ்ரீராமன் தசமுகன் மீது காட்டிய கருணையே சான்றுகும்.

அதிகக் கொடியவன் இராவணன். அகில உலகும் அவனுல் இன்னல் அடைந்தது. எனவே அவனை சம்ஹரிக்கத் திருவுள்ளம் கொண்டான் அச்சுதன். எத்தகைய தேவராலும் தனக்கு மரணம் நேரிடக் கூடாதென்பது அவன் பெற்ற வரம் எனில், மானிடர்தான் அவனை வெல்ல வேண்டும். மானிடருக்கு அவனை வெல்லத் தக்க ஆற்றல் இல்லை. அவனை எதிர்த்தவர் எவரும் அழிந்து பட்டனர். எனவே, இராவணன் இட்டதே எவ்வுலகிலும் சட்டமாய் இருந்தது.

உலக உயிர்கள் தவிப்பதையும், மாதர்கள் கலங்குவதையும், முனிவர்களின் வேள்வி முடிவுருமல் கெடுவதையும், தருமதேவதை தத்தளிப்பதையும் கண்ட இறைவன் அவனியில் மானிடனுகவே அவதரித்தான்.

மானிடத் தோற்றத்தில் இருந்து, மானிட தருமத்தை நடத்திக் காட்டி அதனை மானிடர் அனுசரிக்க வேண்டுமெனக் கருதிச் செயலாற்றினன். ஸ்ரீராமனை வளர்த்தவள் கைகேயி. அவன் மீது எல்லையற்ற அன்பினையும், பாசத்தையும் கைகேயி கொண்டிருந்தாள்; அவள், மந்தரையின் சொற்களில் மயங்கி, மதிதடுமாறி, மனம் வேறுபட்டு, ஸ்ரீராமனைக் கானகமேகுமாறு கட்டளையிட்டனள். 'இது தந்தையின் கட்டளை. இதனை உனக்குத் தெரிவிக்கிறேன். வனம் சென்று புனித நீராடி புனித முனிவரின் ஆசிகளைப் பெற்றுப் பதினுன்கு ஆண்டுகள் கழித்து மீண்டும் வருக!' என்றுள். 'அதுவரை உன் தம்பி பரதன் அயோததியை அரசு புரிவான்' என்றுள். அதனைக்

கற்றேன, கடைவிரித்தேன், கண்ட பொருள் ஒன்றில்லை;
உற்றேன் உனதருளை ஓர்ந்துகொண்டேன் புண்ணியனே!

கேட்டவுடன் ஸ்ரீராமனின் வதனம், அப்போதுதான் பூத்து விரிந்து விளங்கும் தாமரை மலரைப் போன்று ஆனந்தத்தால் மலர்ச்சியுற்றது.

ஆனால் உண்மையில் ஸ்ரீராமனே தனது மாயையால், ஏனையோர் தான வனமேக முயலும் காரணத்தை அறிய முடியாதவாறு மறைத்து, பெரியோர்களின் சொல்லுக்குக் கீழ்ப் படிதல் சிறியோர்களின் கடமை எனற நியதியை நடத்திக் காட்டினன் என்க.

பயங்கரக் கானகமாகிய தண்டக வனத்தினுள் ஸ்ரீராமன் பிரவேசித்த போது அவனைத் தரிசித்த முனிவர்கள் தங்களின் நுட்ப ஆற்றலால் அவன இறைவனென அறிநது சரணடைந் தனர். அவர்களின் கோரிக்கைப்படி ஸ்ரீராமன் பஞ்சவடியில் ஆசிரமம் அமைத்துக் கொண்டு தங்கினன. அங்கு வசித்திருந்த தசமுகனின் தங்கையாகிய சூர்ப்பநகை, ஸ்ரீராமனின் எழிலில் மயங்கி அவமதிப்புண்டு, இதர தனது சகாக்களான கரதூஷணரிடம் முறையிட்டு, அவர்களின் வர்க்கத்தை ஸ்ரீராமனின் கணைகளுக்கு இலக்காக்கி, பிறகு ஸ்ரீராமனின் தேவியான சீதையைப் பற்றி இராவணனிடம் தெரிவித்தனள்.

கொடிய இலங்கேசனாகிய இராவணன், தங்கையின் சொல்கேட்டு மயங்கி, மாரீசனைக் கொண்டு, ஸ்ரீராமனையும் இலக்குவனையும் சீதையினிடமிருந்து பிரித்து அவளைக் கவர்ந்து சென்று இலங்கையில் சிறைப்படுத்தினன். இதனால் ஸ்ரீராமனுடன் அவன் போர்புரிய நேரிட்டது.

ஒருநாள் போரில் அனைத்தையும் இழந்து நின்ற இராவணனை ஸ்ரீராமன் பார்த்துக் கூறினன்! இலங்கேச! நீ மாபெரும் வீரன்; எனவே, உன்னோடு போர் புரிய எனக்கு மிகவும் மகிழ்ச்சியும் விருப்பமும் ஏற்படுகின்றன; ஆனால்

அன்பாய்க் கனவில் அருள்கின்ற நல்லருளை,
இன்ப நனவில் இசைவித்தால் ஆகாதோ?

னீயோ இப்பொழுது எல்லாவற்றையும் இழந்தவனாய் இருப்ப தால், போர் செய்ய நாளை வருக !" என்றனன். இந்த அன்பு தான், பகைவரைப் பண்படுத்தும் பண்பு ஆகும். ஸ்ரீராமனின் இத்தகைய சிறந்த பண்பு கண்டு, இராவணன அடைந்த மன வேதனை எத்தகையது என்பதைக் கம்பர் பின்வருமாறு குறிப பிடுகின்றார்.

விடன்கொண்ட மீனைப் போலும் வெந்தழல் மெழுகைப் [போலும்,
படங்கொண்ட பாந்தள் வாயில் பற்றி தேரை போலும்
திடம்கொண்ட ராம பாணம் செருக்களத் துற்ற போது
கடன்பட்டார் நெஞ்சம் போலும் கலங்கினான் [இலங்கை வேந்தன்

[விடன் - செம்படவன், பாந்தள் - சர்ப்பம்.]

தன்னைக் கொல்ல நியாயமும் சந்தர்ப்பமும் இருந்தபோதே மன்னிபபு அளித்த ஸ்ரீராமனின தகைமை கண்ட இலங்கேசன் தனது சென்ற காலக் கீர்த்தியையும் இப்போது தான் செய்த குற்றத்தையும் ஸ்ரீராமனின அருள் நிலையையும் சீர்தூக்கிப் பார்த்து, இறுதியில் தனது குற்றங்களுக்கெல்லாம் பிராயச் சித்தமாவது, அவ்வுத்தம புருஷனுடைய கணைக்குத் தான் ஆளாவதே எனத் தீர்மானித்து, தனது சேனைகளுடன் தானும் சேர்ந்து ஸ்ரீராமனின் பாணத்திற்கு இரையாயினன். ஸ்ரீராம னும் அகிலம் புகழ, சீதையுடனும் இலக்குவனுடனும் அயோத்தி சென்று அரசோச்சி அறத்தை நிலை நாட்டினன்.

உ

வருக ! *அருளின்பம் பருக* வருக !!

ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் பெருவிழா

திருவண்ணாமலையில்

1964 ஆகஸ்டு மீ 15 உ சனிக்கிழமை

இவரும் ஒரு கருவூரார்

(ரஸபதி)

உலகத் தொழில்கள் ஒவ்வொன்றும், விஸ்வ கர்மர்கட்கே உரியன. அவர்களுள் ஒருவர் கமலமுனி. கமலர் உறவினர் கருவூரார். இவர் தேவி உபாசகா. கருவூரார் கொள்கை யைத தழுவிய காரணத்தால், இவரையும் கருவூரார் என்றே மக்கள் கருதினர்.

ஆன்மாக்கள் ஒவ்வொன்றும், ஆணுள் அமரும். பெண் ணுள் புகும். கருவாயுள் கட்டுப்படும். உடலமைப்பு, சிறிது சிறிதாக உருவாகும். பத்து மாதங்கள் பல பாடுபடும். பேரவஸ்தைப் பட்டுப் பிறக்கும். வளரும். சிரிக்கும். அழும். உலக கோர வாழ்க்கையில் உழலும். இருந்ததைத் துறந்து இறக்கும். சிலநாளில் மனைமக்கள் சுற்றம் அதை மறக்கும். இவ்வளவுதான் ஆன்ம உலக வரலாறு.

பிராணன் உண்டு; அதனில் பிராட்டி இருக்கின்ருள். அந்த சக்தியை அறியாத ஆன்மா, என்ருே ஆரம்பித்த பிறந்து இருந்து இறக்கும் பிரயாணத்தை, இன்றுவரை நிறுத் தியது இல்லை.

இறந்தார் உடல்களை, சுடலையில் கொண்டுபோய் உலகம் சுடுகிறது. இது நாள்தோறும் காணும் செய்திதான். ஆயி னும், நாம் இன்னும் பலநாள் இருப்போம் என்று மதித்துக் கொள்கிறது மனம். குண்டலினி சக்தியின் கருணைதான், இந்தத் தைரியத்தைக் கொடுக்கிறது.

" கும்பிதனி லேமிறந்து குண்டலினி பொற்கமலம்
நம்பி யிருந்தேன், ரகசியம் காண்கிலேனே "

என்று, ஆரம்பதத்தில் கதறி யழுதவர் கருவூரார்.

எந்தவிதம் நின்னருள் எண்ணுகின்ற தானுலும்,
அந்தவித மேசெய்து அத்தா அருளுதியே!

எண்பத்து நான்கு லட்சம் ஜீவபேதம் என்பர். சிந்தனை செய்யும் தகுதியால், அவைகளுள் மாநுடப் பிறப்பு மதிப்பிற்கு உரியது. சில்லிக் குடத்தில் நீர் சிந்துவது சகஜம்; சிந்தாது இருப்பது சிறப்பு. அதுபோல், இறப்பது சுலபம். பொள்ளல் உடம்பில் உயிர் வெளிபபட்டுப் போகாது இருப்பது அதிசயம். அது, அன்னை குண்டலினியின் அருள் உதவி. சீவகரணம் மாறிச் சிவமாகும் வரையில், எவரும் இறவாது இருக்க வேண்டும். அதற்கு யாது வழிவகை? என்று, கருவூரார் பலகாலம் முயன்றார். அரிய நிலைகளை அறிந்தார்; அனுபவித்தார். தாம் அடைந்த பயனை, அனுட்டித்த வழிமுறைகளை, அருளொடு நமக்கும் அறிவிக்கிறார்.

பாதரசம், சித்தர்கள் பரிபாஷையில் சிவவிந்து என்று சிறப்புப பெயர்பெறும். அது, உயிர் தங்கிய இவ்வுடலில் ஊறிச் சுரக்கும். கம்பீர வைதிக வழியில், அதைக் காக்க வேண்டும்.

பெண்ணில் உளது வாலையின் நாதம். ஆணில் உளது சிவ விந்து. மரண நாளில், இரு பாலார்க்கும் அச்சக்தி வெளிப்பட்டு விரையம் ஆய்விடும். அடித்து மோதிக் கொண்டு அழுகின்ற எவரும், அதை அறிவது பெரும்பாலும் இல்லை. எனவே, விந்துநாத வீண் விரையம், காலனுக்கு அழைப்பும் பத்திரம் அனுப்புது போல்வது என்று, அறிவிக்கிறார் கருவூரார்.

"உணர்வு கலங்கி ஒழுகிய விநது
ஊறு சுரோணித மீது கலந்து" என்பது பழையகுரல். பிறப்பிலும் உணர்வழியும்; இறப்பிலும்உணர்வின் அழிவு. இறந்தாலும் பிறந்தாலும், உணர்வு கலங்காது இருந்தால், பிறக்கும் பின்னை ஒரு ஞானியாய்ப் பிறப்பான் என்பது அவர் கொள்கை.

வஞ்ச உடலை மறைத்துவிடு! என்உயிரைக்
குஞ்சித பாதத்தில் கூடச்செய் எங்கோவே!

அங்ஙனம் இன்றி, பெறுவார் அனைவரும், இராவண துரியர்களை, தாடகை கூனிகளைப் பெற்று வைத்து என்ன பயன்?

காலையில் எழுந்ததும், கைகால் வாய் முகம் துலக்கி, கோழையை விரல்விட்டு எடு! ஏழையாக இருக்கலாம்; கோழை யாவது கூடாது. அதன்பின் உடனே நீராடாமல், முகம் துலக்கி, நீறணிந்து, அயர்வு தீரும்வரை நிமலனை நினைந்து இரு! பிறகு நீராடி அனுட்டித்தல் செய்!

மருத்துவர்கள், நாடி பிடித்து உடலின் நலம் தீங்கறிவர். அதுபோல், நாமும் நாடி பார்த்தல் நலம். வைத்தியர்கள், வாத பித்த சிலேத்தும நாடிகளைத் தொட்டுப் பார்த்து, துடிப்பை யறிந்து, சால்பு பெற மூன்றையும் சமம் செய்ய முயல்வர். நாமும் சந்திர நாடி, சூரிய நாடி, அக்கினி நாடிகளை, பயன் தரும் உணர்வொடு பார்த்துப் பழகினால், அன்னை வாலை துணை ஆவள். சுவாசநிலை யறிதலை, நாடிபார்ததல் என்பது சித்தர் உலக பரிபாஷை.

வாசி, ரவி, மதி, சத்தி, சிவம் என்பன, சுவாசத்தின் பரியாயப் பெயர்கள். சுவாசம் கீழிறங்கினால், நஞ்சு; மேலேறினால், அமுதம். இதை அறிவதற்கு அறிவு; உணர்வதற்கு உள்ளம்; சாதனைக்கு உடல தேவை. விரையம் ஆகாதபடி, இம் மூன்றையும் போற்றிக் கொள்வது புண்ணியம். நுணுகி உணர்வது சமயம்; சமய நுட்பம் உணராத விஞ்ஞானம், நொண்டி; விஞ்ஞானத்தைக் கருதாத சமயம், கண்குருடு.

புத்திக்குள் தெய்வம் புகவேண்டும்; அதற்கு முயல்வதுதான் அறிவு; அதனபின் தெய்வம், அங்கு இடம் பெயராது இருந்து விடும்.

"நேசம் பதிந்துள்ளே நின்றுருகி, நெஞ்சுள்ளே
பேசினால் பேசும் பிரான."

கற்கண்டு போலுன் கவினுர் திருவடியை,
இல்கட்டுத் தீர, இனிதருள்நீ எம்துரையே!

இங்கிலேயில் கரைந்து கரைந்து, ஆன்மா அலேபோல் எழும் கருணைக் கடலில் கலந்து விடும்.

சிதம்பரத்தில் 21600 பொன் ஓடுகள்; அவைகள் 21600 சுவாசத்தை அறிவிக்கின்றன. அவைகளைக் கட்டுப் படுத்திய திருமூலர், ஆநந்த சமாதியில் அங்கு அமர்ந்துளர்.

சுவாசத்தாலும் வெப்பத்தாலும், இந்த உடல் இயங்கு கிறது. சூடு சிவம்; சுவாசம் பிராணன். சூடு உள்ளவரை வாழ்வு; சில்லிட்டால் மரணம். சூடு குளிர்ச்சிகளை, நம் விருப் பப்படி நாமே உண்டாக்கிக் கொளவேண்டும்.

சுவாசத்தை உள்ளிற்கு இழுத்தால், வங் என்ற ஒலி எழும்; வெளியில் விட்டால், சிங என்று ஒலி கேட்கும்; உள்ளேயே நிறுத்தினல், மங் என்னும் மெலலொலி பிறக்கும். உள்ளே போனல் மூச்சு; வெளியே போனல போசசு. சுவாசம் உள்ளிருந்தால சிவம்; வெளியே போய்விட்டால் சவம்.

ரவி மதி எனும் சூரிய சந்திர கலேகளை, குறிப்பாக எண் ணிக் கும்பகம் ஆக்கினல், உணர்வுக்கனல் ஆகி உதவு பவள் வாலே. சாதனையில் அததேவி, அமைதி ஆடல், ஆவேசக் கூததுப பல செய்வள; கண்டு கைகுவிக்க வேண்டும்; கண்டு விட்டோம் என்று கர்வம் கொளவது கூடாது.

" ஆதியந்தம் வாலேயவள் இருந்தவீடு
ஆச்சரியம் மெத்த மெத்த அதுதான் பாரு !
ஊணப்பா அமுதம் இவள் ஊட்டி வைப்பாள் ;
வேணப்பா வேணதெல்லாம் தருவேன் என்பாள் "

பேச்சு மூச்சறறு இருநதால், பிறந்த பிள்ளை இறந்தது என்பர்; இறுதி நாளில, பேசசடஙகி மூச்சடஙகினல், அதன் பின் உரியவர்கள் அலறி அழுவர். ஆதியிலும் வாலே உதவுகிருள; அந்தத்திலும் அவள் தயவு அவசியம் தேவை. அவள இருககும் வீடு, இந்தத் தேகமாகிய கூடு.

காடுபோல் அடர்ந்த கயமை இருளதீர,
வீடுதா! தெய்வ விருந்தளி நீ மெயப்பொருளே!

அன்னையை எண்ணிப் பிள்ளை அழுமானால் அழுத பிள்ளையை, தாய் எடுத்து அமுதம் ஊட்டுவள். சந்திரகலை சூரியகலைகள் கும்பகமாகி, அக்கினி கலையில் உறவுகொளும் போது, மதிமண்டல அமுதம் பெருகிவரும்; அதைப் பருகுபவர், இறவாது பலகாலம் இருப்பர். அந்த அமுதத்தை ஊட்டும் வாலையை, "ஊணப்பா அமுதம் இவள் ஊட்டி வைப்பாள்" எனகிறார். அவ்வளவுதானா!

இந்த சத்தியின் உபாசனையால், சர்வமும் சித்தியாகும்; இதனை "வேணதெல்லாம் தருவேன் என்பாள்" என்றும் விளக்குகிறார். அன்று ஆளுடைய பிள்ளையார் பெற்ற பேறு, எவரும் பெறலாம் எனபது குறிப்பு.

அறைவீட்டிற்கு உள்ளிருந்து அம்பிகையைப் போற்று;
சக்தியால் பல் சித்திவரும்"

என்பதும் இங்கு சிந்திக்கத் தகும்.

இல்லறத்தில் சாதகர்கள் இருக்கலாமா? என்று, குறுக்கும் மறுக்குமாகக் கூறுவர் சிலர். அதற்குக் காது கொடாதே! போகர், அகத்தியர், கொங்கணர் இல்லறத்தார் அல்லரா? ஏதேதோ பேசி, நையாண்டி செய்வார் சொல்கேட்டு ஏமாந்து போகாதே! மேல் சொன்ன சாதனைப்படி, வாலையை என்றும் வழிபடு!

நித்திரை தன்னிலும் வீற்றிருப்பாள்—எந்த
நேரத்திலும் வாலை முன்னிருப்பாள்
சத்துரு வந்தாலும் தள்ளிவைப்பாள்—வாலை
உற்ற காலனையும் தான் உதைப்பாள்.

அவள் மகன் நீ என உன்னை உணர்வது முத்தி. இதை நன்றாய் உணர்ந்துகொள் என்றும் உணர்த்துகிறார்.

அண்டத் தவருடனான் அன்பாய் உறவுகொண்டு,
பிண்ட ரகசியங்கள் பேசச்செய் பெம்மானே!

'கருவிகள் தொண்ணூற் றூறும் கட்டறுத்தேன் ;
(அதனுல்) கந்தன் என்ற பேரும் கொண்டேன் ! '
என்று சுபரமண்ய ஞான நூலும் சொல்கிறது.

மரண காலம்வரை, இரவும் பகலும் எந்த நேரமும், சீரழிக்கும் உடலுறவையே சேவல் சிந்திக்கிறது. அதன் அறிவு தெளிய, அதைக் கொடியாகப் பிடித்தான் குமரன். இதையும் எண்ணிப் பார் !

தியான காலத்தில், கண் இமையாமை புண்ணியம். 'அம்புலி மாமா வாவா !' எனும் பிள்ளை விளையாட்டில், மதியை இமையாது பார்க்கும் மரபு உணர்த்தப் பெறுகிறது. இவ்வளவு நேரம் எழுதியதைப் பழம்பாட்டிகள் படித்தால, 'உண்மைதான். நாங்களும் கண்ணுமூச்சி யாட்ட காலத்தில்,

(1) உடும்பு தடும்பு - (தசையால்) உடம்பு தடித்துள்ளது.
(2) தத்தள - (வாழ்க்கையில் அது) தத்தளிக்கிறது.
(3) பித்தள - (வாத) பித்தங்களே காரணம்.
(4) மக்கான் சுக்கான் - (சுக்குப்போல) உடலை வற்ற வை!
(5) பால் பரங்கி - அமுதம் ஊற்றெடுக்க,
(6) ஸாட்மே ஓட்மே - இடைகலை பிங்கலைகளைக் (கருத் தொடு நாங்கள்) கவனிப்போம்.
(7) சீ செல் - (கால கர்ம தேவதைகளே !) நீங்கள் போய் விடுங்கள் என்று பாடுவோம்; மற்றொரு சமயம்,
(1) மாடும் கன்றும் வரச் சொல்லோ - சாயும் அஸ்தமன வேளையில்,
(2) மஞ்சள் வெயிலும் காயச் சொல்லோ - மஞ்சள் பூக்கும் மரண நேரத்தில்,
(3) காலை மடக்கடி காமாட்சி - வாலை எனும் சக்தியே ! சந்திர சூர்ய கலைகளை மடக்கி, அக்னி கலையில எம்மை வை என்று, குறிப்புப் பொருள் படவும் கூறுவோம்' என்று, உவகை யுடன உரைப்பதுவும் இயற்கை.

கருவூரார் சொல்லும் குறிப்புகள், இப்படி ஏராளமாக இருக்கின்றன. அவைகளுள், சிலவற்றை மட்டும் அடுத்த இதழில் ஆய்வம். (தொடரும்)

எக்களிப்பில் உன்றனருள் எண்ணி, எழுதிவரும்
இககளிப்பில், நின்னில் இணைந்துமகிழ் கின்றேனே !

LIFE-CLOCK

With most men the clock of life unwinds during the days and gets wound up during the nights. The day and night together constitute a small cycle called a day. Life ceases when the days are numbered. Where the days are lost in the preoccupation of the mind with the divine and the universal, life continues to be what it was and will be what it is. Life realisation is no more than being beyond time. The awareness of the outside world works for the exhaustion of life-energy ; even as the loss of awareness as during sleep at night acts as a refill. The awareness to the Omnipresent Lord is an unfailing source for man to draw upon for life energy. In the awareness to the Lord around, days are never numbered. The life and the days to be numbered in its course act on a spring. According to the Siddhars every man holds within his body the secret spring which unfolds as the expressed life of the world. Man can keep always the life-springs within himself in a proper working condition. Unwind slowly and deliberately for useful and happy purposes. Make up for what might have been spent by winding up the springs of meditation and concentration on the Divinity. Intent Bhajana is an excellent help in the matter of winding up and preserving the

springs of life. True and effective Bhajan does not induce a state of tiredness or exhaustion. It induces a freshness, and the more of Bhajan the merrier. The marks of spentage will disappear; the static joy of God-contact supervenes, and the consciousness of passing time gets benumbed When the individualistic sense of separated life merges in the joy of All Life, you get in Bhajan what is all worth in life to get.

It is a trite saying that the man in the game cannot see and judge as much as a man out of the game. What an informing truth! If ever you want to see or enjoy the glory of creation, you must bring to bear a proper outlook on it. If you are lost in the fray and turmoil of the world, you are so much of it and so much in it that you can never get an outlook on it. The forest is lost in the trees and the life is lost in the numbered days. If you get out of the world, you can see things in their proper proportion and get to a correct judgment. The sages therefore advise man to get out of the world, so that the Lord within the world can be seen, sensed and enjoyed. Time and distance are of the world From where love destroys separatism and time, the dawn of eternal life emerges. —*Thuruppugal Mani.*

5-9

அமிர்தவசனி பிரசுரங்கள்

54, பந்தர் தெரு, சென்னை-1.

குகஸ்ரீ ரசபதி அவர்களின் விரிவுரையுடன்

அரிய அருள் நூல்கள்		ரூ.	நபை.
கந்தரநுபூதி	(விரிவுரை)...	1	25
திருவகுப்பு (6 மட்டும்)	,, ...	1	50
திருச்செந்தூர் பிள்ளைத்தமிழ்	,, ...	2	00
கந்தர் கலிவெண்பா	,, ...	2	00
திருக்கயிலாய ஞானவுலா	,, ...	2	00
விநாயகர் அகவல் (ஔவையார்)	,, ...	1	50
கோளறு பதிகம்	,, ...	0	40
சண்முக கவசம் (பாம்பனடிகள்)	,, ...	0	60
திருப்புகழ்மாலை (360 பாடல் மட்டும்).	...	1	25
கநதக்கதம்பம் (பாடல்மட்டும்) 288 பக்கம்.	...	1	25

தபோவனப் பதிப்பக நூல்களும் அனுப்ப இயலும்.

அமிர்தவசனி சந்தாதார்ர்கட்கு வேண்டுகோள்

சித்திரைமீ முதல் பங்குனி முடிய வருடசந்தா உள்நாட்டிற்கு ரூ. 3. பணம் முன்னதாக அனுப்பவும். வி பி. இல்லை.

இலங்கைக்கு நான்கு வருட சந்தா ரூ. 14. அனுப்பவும் வி. பி. இல்லை.

மலேயா, ஆப்பிரிக்கா, மற்ற நாடுகளுக்கு நான்கு வருட சந்தா 30 ஷில்லிங்குகள், போஸ்டல் ஆர்டராக அனுப்பலாம்.

சித்திரை மாதத்திற்கு முன்னதாகவே சந்தாத் தொகையை அனுப்பினால் தொடர்ந்து பத்திரிகை கிடைக்கும். வருட நடுவில் சந்தாச் செலுத்தினால், சித்திரைமீ முதல் வந்த முன் இதழ்கள் கிடைக்கக் கூடுமாயின், சந்தாத் தொகையைப் பெற்றுக் கொள்வம்.

அமிர்தவசனி 54, பந்தர் தெரு, சென்னை.

பாட்டா னதைவண்டு பாடும் குழல்சண் பகவல்லிதன்
தாள்தா மரையைத் தொழுதேன்; இனிஎன் தலையில்,விதி
தீட்டான்; கருமுகில் போலேவரும் அந்தச் சேட்டெருமை
மாட்டான், இனிவர மாட்டான்; வந்தாலும் வணங்குவனே!

No. 1506
ASOKA
1506

Regd No M. 5390 — ஆடிமீ (1964 அமிர்தவசனி 16-4)

Coffee
Ours for Quality

RAW, ROAST OR GROUND
GANESH & CO., (MADRAS) PRIVATE LTD.
MADRAS.

நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் உங்கள்
நன்மதிப்புப் பெற்ற நகை வியாபாரிகள்
சுவர்ண மாளிகை
A. S. S. M. சோமசுந்தரம் செட்டியார் & Co.
தங்க நகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் வியாபாரம்.
124, தெற்காவணி மூலவீதி :: மதுரை
Tel: "FAITH" Estd: 1924. Phone: 2113

குடை மார்க் பினாயில்
(சிறந்த கிருமி நாசினி)
தயாரிப்பாளரும், விநியோகஸ்தரும்:
ஸ்பிரிட் வேர் ஹவுஸ்
49, சைடன் ஹாம் ரோடு
சென்னை-3.
டெலிபோன்: 33982

அமிர்தவசனி சந்தாதாரர்கட்கு வேண்டுகோள்:
பங்குனி மாதத்துடன் உங்கள் வருட சந்தா முடிவடைகிறபடியால்,
தயை கூர்ந்து குரோதி வருஷ சந்தாத் தொகையை அனுப்பும்படி
ஞாபகப் படுத்துகிறோம். வி. பி. யில் அனுப்ப இயலவில்லை
அமிர்தவசனி காரியாலயம் 54, பந்தர் தெரு, சென்னை-1. போன்: 22594

Printed by V. Thirunavukarasu at the Rathnam Press (Branch)
65, Tirupalli Street, Madras-1.
Edited & Published by S. Muthuswami, 8, Bunder Street, Madras-1.